
UCSC

# ஆண்டறிக்கை 2013



## கொழும்புப் பல்கலைக்கழக
## கணினி கற்கைகள் நிறுவகம்

# கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகம்

## உள்ளடக்கம்


தொலைநோக்கும் இலக்கும் ........................................................................................ 48

பணிப்பாளரின் மீளாய்வு ........................................................................................ 49

UCSC மீதான ஓர் பார்வை ........................................................................................ 51

UCSC பற்றிய ஒரு கண்ணோட்டம் ........................................................................................ 53

ஆட்சி ........... ...... ........................................................................................ 55

கல்வி ............ ........................................................................................ 58

நிகழ்ச்சிகளும் மாணவர்களும் ........................................................................................ 58

பட்டப்படிப்பு ........................................................................................ 58

பட்டப் பின்படிப்பு ........................................................................................ 71

வெளிவாரிப் பட்டங்களும் விரிவாக்கல் கற்கைநெறிகளும் ................................ 73

வெளிநாட்டு மாணவர்கள் ........................................................................................ 77

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கைநெறிகள் ........................................................................................ 77

ஆய்வு ........................................................................................78

ஆய்வு, புத்தாக்கங்கள் மற்றும் பிரசுரங்களும் ........................................................ 78

மாநாடுகள், கருத்தரங்குக்கள் மற்றும் செயலமர்வுகள் ........................................ 80

கிடைத்த விருதுகள் ........................................................................................ 81

கல்விசார் ஆளணியினர் ........................................................................................ 81

கல்விசாராத ஆளணியினர்: நிரந்தரம் (P) ஒப்பந்தம்/ஒப்படைப்பு (C/A) ............ 82

நிதி ........................................................................................ 84

மீண்டெழும் செலவினங்கள் .. ........................................................................................ 84

மூலதனச் செலவினங்கள் . ........................................................................................ 85

கருத்திட்டங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை) ............................86

கருத்திட்ட செலவினங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை).... ....... 88

நிதிச்செயலாற்றல் (செலவினங்கள்) ........................................................................ 88

நிதிச்செயலாற்றல் (உருவாக்கப்பட்ட வருமானம்) ... ........................................ 88

நிதிச்செயலாற்றல் ஆய்வு .. ........................................................................................ 88

உட்கட்டமைப்பு வசதிகள் 2013 இல் பெற்றுக்கொண்டவை ........................ 89

ஏனைய விபரங்கள் / இந்த அறிக்கையுடன் தொடர்புடைய செயலாற்றல் .......... 90

கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் - 2013 ................................ 92

கணக்காய்வாளரின் அறிக்கை - 2013 ........................................................................96

கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்பிலான UCSC இன் கருத்து – 2013.. .......................105

# கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகம்

**2013 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையும் கணக்குகளும்**

தொலைநோக்கும் இலக்கும்

---

தொலைநோக்கு கூற்று

*கற்றல் மற்றும் ஆராய்ச்சி மூலம் புதிய அறிவியலின் எல்லைகளைக் கடந்து, கணினியிலில் உலகலாவிய முன்னோடியாக திகழ்தல்.*

**இலக்கு கூற்று**

*கணினி அறிவை மேம்படுத்துதல் மற்றும் வளர்ச்சியடைச் செய்தல், உலக உபாயவழி முன்னனிகளை உருவாக்கிக்கொள்ளல், பல்துறை ஆய்வுகளை மேம்படுத்துதல், தொழிற்றுறை திறன்கள், தலைமைத்துவ பண்புகள் கொண்ட சமூக ரீதியில் பொறுப்புக் கூறுகின்ற மற்றும் சிறப்புமிகுந்த தொழில்வல்லுநர்ககளை உருவாக்குதல் மற்றும் நாட்டை பிராந்தியத்தில் அறிவுக் கேந்திர நிலையமாக ஆக்குதல் என்பவற்றுக்கு பங்களிப்புச் செய்தல்.*

**குறிக்கோள்கள்**

1. கணினி கல்வியினைக் கற்பித்தலிலும் கற்றலிலும் சிறந்த நிலையமாக திகழ்தல்.
2. கணினி கல்வி தொடர்பான பல்துறை ஆய்வுகளின் எல்லையினை விரிவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
3. தொழிற்றுறைத் திறன்கள், தலைமைத்துவ பண்புகள் உள்ள, சிறப்புமிகுந்த மற்றும் சமூக பொறுப்புக்கூர் தொழில்வல்லுநர்களை உருவாக்குதல்.
4. பயன்மிகு வேலை மற்றும் தொழில் மேம்பாட்டுக்கு நன்மையளிக்கும் சூழலொன்றை உருவாக்குதல் மற்றும் அதனைப் பேணிச்செல்லல்.
5. நிறுவனம் சார் கீர்த்தியை வளர்ச்சியடைச் செய்தல்.
6. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) ஊடாக சமூகத்தை வலுவூட்டுதல்.
7. நாட்டை அறிவுக் கேந்திர நிலையமொன்றாக ஆக்குவதற்காக குறிப்பிடத்தக்க பங்களிப்பினை செய்தல் மற்றும் தேவையான தொழிற்றுறைசார் சேவைகளை வழங்குதல்.

கணினிக் கல்வியில் உயர் கற்கைத்துறை நிலையம் என்ற வகையில் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகமானது (UCSC) பட்டப் படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு மாணவர்களையும் அதேபோல் தகவல் தொழில்நுட்பத் (IT) துறையினரையும் இந்தத் துறையின் நவீன அபிவிருத்திக்குப் பயிற்றுவிக்கும் பணியைத் தொடர்ந்து மேற்கொள்கின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்ட 769 உள்ளகப் பட்டதாரிகளுக்கு மீள்வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கேற்ப நான்கு பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றது. அத்துடன், 1275 விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு விஞ்ஞானத் தளங்களைப் பயன்படுத்துவது தொடர்பிலான தகவல் தொழில்நுட்பப் பயிற்சியை வழங்கியுள்ளதுடன், 2034 மாணவர்களுக்கு வெளிவாரியாக தகவல் தொழில்நுட்பமாணி (BIT) பட்டப் படிப்பினை மேற்கொள்ளவும் வாய்ப்பினை வழங்கியுள்ளது. 303 மாணவர்கள் முதுமாணிப் பட்டத்தினை பயின்று வருவதுடன், 39 பேர் ஆய்வுப் பட்டங்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களில் 448 பேர் பட்டப் படிப்பையும், 128 பேர் பட்டப் பின்படிப்பு மற்றும் 6 பேர் தத்துவமாணிப் பட்டக் கற்கைகளையும் கற்பவர்களாக காணப்பட்டனர்.

அரசாங்கத்தினால் சம்பளம் அதிகரிக்கப்பட்ட போதிலும், UCSC இற்கு திறைசேரி மானியம் மூலம் கிடைத்த மீண்டெழும் ஒதுக்கீடுகள் குறைவாகவே காணப்பட்டது. UCSC இன் உள்ளகப் பட்டதாரி மாணவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட நிதியான 242 மில்லியன்களிலிருந்து 88 மில்லியன் (37%) தொகையினை செலவிடவேண்டியேற்பட்டது. ஏனைய பயிற்சி நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகமானது (UCSC) ஆய்வினூடாகப் புதிய அறிவினை உருவாக்குவதற்கு அதிக அழுத்தம் கொடுக்கிறது. ஆளணியினர் 70 மாநாட்டு மற்றும் சஞ்சிகை ஆக்கங்களை வெளியிட்டுள்ளனர். கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகமானது (UCSC) அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் சார்பாக ஆலோசனைக் கருத்திட்டங்களை நடத்திச்செல்லவும் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துவருகிறது. தேசிய நிகழ்வுகளில் போட்டியிட்டு பிற வணிக உற்பத்திகள் 46 இனை தோல்வியுறச் செய்து ICT தேசிய சிறந்த தர (National Best Quality ICT) பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் விருதினை தொடர்ந்தும் திறமையான முறையில் வெற்றி பெற்றுள்ளனர். பட்டப் பின்படிப்பு ஆய்வில் உச்ச தரத்தினைப் பேணும் அதேவேளை மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் தேசிய மற்றும் சர்வதேச நிகழ்வுகளில் 22 விருதுகளை வென்று பட்டப் பின்படிப்பி ஆய்வில் உச்ச தரத்தினை பேணிவருகின்றனர். பணியாளர்கள் சமூகத்திற்கு அவர்களின் பங்களிப்பாக பல வெளிக் குழுக்கள், சபைகள் மற்றும் தொழில்சார் நிறுவனங்களில் ஈடுபடுகின்ற அதேவேளை, மாணவர்கள் கிராமப்புறப் பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு தகவல் தொழில்நுட்ப பரப்புதல் நிகழ்ச்சித் திட்டங்களைகளைத் தொடருகின்றனர்.

புதிய மார்க்கங்களை தேடிச்செல்வதற்காக எமது உபாயவழித் திட்டமானது மீளமைக்கப்பட்டது. வெளிவாரிப் பட்டப்படிப்பு மற்றும் ஆய்வு வணிகமயமாக்கல் ஊடாக 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர்கல்வி முனைப்பினூடாக (HETC) வெற்றிகரமாக தொடருகின்ற ஆரம்பச் செயற்பாடுகளை முன்மொழிந்துள்ளது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிக் கல்வி நிறுவனமானது (UCSC) அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்குமான 13,814 மாணவர்களுக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப (IT) முன் ஆயத்த சோதனை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சார்பான பல்கலைக்கழகத் தெரிவு மற்றும் ஒதுக்கீட்டு முறைகள் மற்றும் சவாலான பிற கருத்திட்டங்கள் போன்ற 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர்கல்வி முனைப்பினால் (HETC) நிதியிடப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு தொடர்ந்தும் உதவியளிக்கின்றது. UCSC இன் பணியாளர்கள் ஆய்வுக் கருத்திட்டங்களுக்கான தேசிய ஆய்வு மையத்தின் (NRC) பல மானியங்களையும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் (NSF)) மானியத்தையும் பெற்றுக்கொள்வதில் வெற்றியடைந்துள்ளனர்.

நீண்ட காலமாக செய்யப்படாதிருந்த UCSC இன் பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் இவ்வாண்டிலும் தொடர்ந்து நடைபெறுவதுடன், பூர்த்திசெய்யப்பட்ட பகுதிகள் சில பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு மாணவர்களால் ஏற்கனவே பயன்படுத்தப்படுகின்றது. இது, கடந்த ஐந்து வருட காலமாக முகங்கொடுத்து வரும் இடவசதி தொடர்பிலான சில விமர்சன ரீதியான பிரச்சினைகளுக்கு பகுதியளவான  தீர்வினை வழங்கும். எனினும், இன்றும் சில உட்கட்டமைப்பு மேம்படுத்தல் கருத்திட்டங்கள் ஊடாக எதிர்கால நீடிப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும். UCSC ஆனது நாட்டிலுள்ள மிகவும் தகுதிவாய்ந்த கணினி ஆளணியினரை வைத்திருப்பதுடன், மனித வளப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் 20 பேரை அதன் கல்வியாளர் குழாமை வலுவூட்டுவதற்காக வைத்துள்ளது. வெளிநாட்டு ஆளணிப் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டமானது Umea பல்கலைக்கழகத்துடன் தொடர்வதுடன், மேற்படி பல்கலைக்கழகத்தில் இருந்து முதன்முறையாக மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் பரிமாற்றம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

தற்போதுள்ள பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களின் பாடத்திட்டங்களை சர்வதேச தரத்திற்கு அபிவிருத்தி செய்தல் பூர்த்தியடைந்துள்ளதைத் தொடர்ந்து, இவ்வாண்டில் மென்பொருள் பொறியியல் புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சிக்கான உள்வாங்கலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. பொறியியல் மற்றும் மருத்துவப் பட்டதாரிகளின் மட்டத்திற்கு எமது பட்டதாரிகளின தொழில்வாய்ப்புத் திறனும் உயர்வடைந்துள்ளது. பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு உள்வாங்கல்களும் ஆய்வு உட்பட பட்டதாரி மற்றும் பட்டப் பின்படிப்பு பட்டதாரிகளின் வெளியீடும் இவ்வாண்டில் அதிகரித்து இருந்ததை அவதானிக்க முடிந்தது. இவ்வாண்டிலும் எமது பட்டப்படிப்பு நிகழ்ச்சிக்காக வெளிநாட்டு மாணவரொருவரை UCSC ஆனது உள்வாங்கிக்கொண்டது.

| | | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| **கல்வி (இணைந்தோர்/ பட்டம் பெற்றோர்)** | | | | |
| உள்ளகப் பட்டதாரி மாணவர்கள் | எல்லாம் | 737 | 738 | 769 |
| | உள்ளே | 238 | - | 254 |
| | வெளியே | 223 | 220 | 212 |
| விஞ்ஞானப் பட்டதாரி மாணவர்கள் | | 1160 | 1267 | 1275 |
| வெளிவாரி டிப்ளோமா | எல்லாம் | 4287 | 4166 | 4175 |
| | உள்ளே | 2365 | 2029 | 2034 |
| | வெளியே | 576 | 654 | 611 |
| வெளிவாரி உயர் டிப்ளோமா | எல்லாம் | 2019 | 2390 | 2391 |
| | உள்ளே | 863 | 974 | 714 |
| | வெளியே | 309 | 262 | 305 |
| வெளிவாரிப் பட்டப்படிப்பு | எல்லாம் | 1293 | 1413 | 1416 |
| | உள்ளே | 442 | 476 | 312 |
| | வெளியே | 129 | 172 | 194 |
| பட்டப் பின்படிப்பு | எல்லாம் | 531 | 523 | 303 |
| | உள்ளே | 143 | 158 | 143 |
| | வெளியே | 94 | 156 | 122 |
| விரிவாக்கல் நிகழ்ச்சிகள் | | 678 | 528 | 309 |
| **ஆய்வு** | | | | |
| ஆய்வு (தத்துவமாணி/ கலாநிதி) | எல்லாம் | 46/00 | 41/01 | 39/07 |
| | உள்ளே | 13 | 10 | 09 |
| | வெளியே | 1 | 3 | 6 |
| ஆய்வுக் கருத்திட்டங்கள் | எல்லாம் | 05 | 05 | 05 |
| | புதிய | 1 | 2 | 1 |
| பிரசுரங்கள் | | 65 | 68 | 71 |
| **ஆலோசனைக் கருத்திட்டங்கள்** | | | | |
| | உள்நாடு | 14 | 12 | 10 |
| | வெளிநாடு | 01 | 01 | - |
| **சமூகப் பொறுப்பு நிகழ்ச்சிகள்** | | 10 | 10 | 10 |

| | | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| ஆட்சி | | | | |
| நிரந்தர கல்விசார் ஆளணியினர் | எல்லாம் | 36 | 37 | 36 |
| | பேராசிரியர் | 02 | 02 | 02 |
| | கலாநிதி | 18 | 19 | 20 |
| | முதுமாணி | 12 | 12 | 10 |
| நிரந்தர கல்விசார் உதவி ஆளணியினர் | | 02 | 04 | 04 |
| தற்காலிக கல்விசார் ஆளணியினர் (போதனாசிரியர்கள், உதவி விரிவுரையாளர்) | | 11 | 12 | 15 |
| நிரந்தர நிருவாக மற்றும் கல்விசாரா ஆளணி | | 32 | 34 | 40 |
| ஒப்பந்த அடிப்படையிலான ஆளணியினர் (அமைய மற்றும் பயிலுநர் உட்பட) | | 37 | 67 | 49 |
| ஆய்வு/கருத்திட்ட ஆளணியினர் | | 14 | 10 | 11 |
| நிதி | | | | |
| வருட மீண்டெழும் செலவு (மில்லி.– இலங். ரூ.) | | 92 | 111 | 133 |
| திறைசேரி ஒதுக்கம் (மீண்டெழும்) (மில்லி.– இல. ரூபா) உண்மையானது | | 83 | 92 | 90 |
| திறைசேரி ஒதுக்கம் (மூலதனம்) (மில்லி. – இல. ரூபா) உண்மையானது | | 16 | 19 | 26 |
| உழைத்த வருமானம் | | 159 | 194 | 242 |
| UCSC இன் பங்களிப்பு – பல்கலை. மானியம் (மில்லியன் – இலங்கை ரூபா) (உழைக்கப்பட்டது %) | | 22 (14%) | 31 (16%) | 88 (37%) |
| UCSC ன் வரவுசெலவுத்திட்டம் (மில்.– இலங். ரூ.) | | 205 | 246 | 286 |
| ஆய்வு/கருத்திட்டம் (மில். – இல. ரூ.) | | 6.2 | 5.6 | 9.3 |
| ஒரு ஊழியருக்கான செலவு ஒரு வருடத்திற்கு (இலங்கை ரூபா '000 ) | | 578 | 670 | 774 |
| ஒரு மாணவனுக்கான செலவு ஒரு வருடத்திற்கு (இலங்கை ரூபா '000 ) திறைசேரி மீண்டெழும் | | 125 | 151 | 152 |
| உட்கட்டமைப்பு | | | | |
| வாசிகசாலைப் புத்தகங்கள் | | 10,214 | 10,405 | 8,303 |
| கணினி : ஆளணியினர் | | 1:1 | | |
| கணினி : மாணவர்கள் (பொது மாணவர்கள்) | | 1:4 | | |
| (விசேட மாணவர்கள்) | | 1:1 | | |
| இடப் பயன்பாடு (ஊழியர்) (ச. மீ) | | 9.42 | 9.42 | 10.42 |
| இடப் பயன்பாடு (மாணவர்கள்) (ச. மீ) | | 1.90 | 2.32 | 2.68 |

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினித் தொழில்நுட்ப நிறுவகம் (ICT) மற்றும் கணினி விஞ்ஞானத் திணைக்களம் (DCS) ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து 1978 ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 அ(1) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கேற்ப, 1995 ஆண்டின் 1 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறு 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதி உருவாக்கப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகம் (UCSC) கணினி விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பவற்றில் உயர் கல்வியை வழங்குதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்ட உயர் கல்வி நிலையமாக செயற்பட்டுவருகிறது. சட்டத்தின் கருத்துப்படி இதுவோர் உயர் கல்வி நிறுவனமாகும். கொழு. பல். கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) கட்டளைச் சட்டம் 2002 நவம்பர் 15 ஆம் திகதி வர்த்தமானியில் (வர்த்தமானி இல. 1262/32) பிரசுரிக்கப்பட்டதுடன், டிஜிடல் குற்றவியல் சட்டத்தன்மைக்கான நிலையமாக உள்ளடக்குவதற்கு திருத்தமொன்று 2011 யூலை 22 ஆம் திகதி வர்த்தமானியில் (வர்த்தமானி இல. 1715/32) மேற்கொள்ளப்பட்டது

## சுருக்கமான வரலாறு

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணிதவியல் திணைக்களத்தில் புள்ளிவிபரவியலுக்கெனத் தனியானதொரு அலகு 1967 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னரே கணினிக் கல்வி கற்பித்தலானது முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. பின்பு, பேராசிரியர் வீ.கே. சமரநாயக்கவின் வழிகாட்டலுக்கிணங்க, புள்ளிவிபரவியல் அலகானது, புள்ளிவிபரவியல் ஆலோசனை மற்றும் தரவுச் செய்முறைச் சேவை நிலையமாக விருத்தி செய்யப்பட்டது. இது பல எதிர்கால அபிவிருத்திகளுக்கு வழிகோலியது. 1985 ஆம் ஆண்டளவில் இந் நிலையமானது புள்ளிவிபரவியல் மற்றும் கணினி விஞ்ஞானத் திணைக்களமாக வளர்ச்சிகண்டது. இத் திணைக்களத்தின் பிரதான பணியானது புள்ளிவிபரவியல் மற்றும் கணினி விஞ்ஞானத்தில் விசேட பட்டப்படிப்பினை நடாத்துவதாகும். இத் திணைக்களமானது கணினி விஞ்ஞானச் சிறப்புக் கற்கை நெறிகளை நடாத்தி, ஒரு வருடத்தில் 40 மாணவர்களை உருவாக்கிய போதிலும், இது வளர்ந்துவரும் கணினி விஞ்ஞானத் துறைத் (CS) தேவையை ஈடுசெய்யப் போதியளவாக இருக்கவில்லை.

1997 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நேரடியாகக் கணினி விஞ்ஞானத்திற்கு 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். எனினும், அந்த நேரத்தில் புள்ளிவிபரவியல் மற்றும் கணினி விஞ்ஞானத் திணைக்களத்தின் (DSCS) கணினி விஞ்ஞான உப பிரிவானது, தனியானதொரு திணைக்களமாக மாறினால் தான் கணினி விஞ்ஞானத்துறையில் வளர்ந்து வரும் தேவைகளைச் சமாளிக்கக் கூடியதாகவிருக்குமென ம் என பலரால் அறியப்பட்டது. அதன் பயனாக 2001 இல், புள்ளிவிபரவியல் மற்றும் கணினி விஞ்ஞானத் திணைக்களமானது (DSCS) கணினி விஞ்ஞானத் திணைக்களம் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் எனும் இரு திணைக்களங்களாகப் பிரிக்கப்பட்டன.

கணினி விஞ்ஞானத் திணைக்களமானது ஒரு பீடத்தின் கீழ் இயங்குவதால் முகங்கொடுக்கும் வரையறைகளை இனங்கண்டு கொண்டதுடன், அதனது எதிர்கால வளர்ச்சி விரிவாக்கத்தை அடைந்து கொள்தற்காக பலமான தொழிற்றுறை தொடர்பொன்று இருப்பதன் முக்கியத்துவத்தை விளங்கிக் கொண்டது. தொழிற்றுறை நோக்கம் கொண்ட கணினித் தொழில்நுட்ப நிறுவனம் (ICT) மற்றும் அதிக எண்ணக்கரு நோக்கிலான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினித் திணைக்களத்தையும் தந்திரோபாயமாக ஒன்றிணைப்பதன் முக்கியத்துவத்தை பல்கலைக்கழகம் விளங்கிக் கொண்டுள்ளது.

கணினி தொழில்நுட்ப நிறுவனமானது (ICT) தொழிற்றுறையினருடனும், அதேவேளை அதிகமான வெளிநாட்டு உதவி நிறுவனங்களுடனும் பலமான உறவுகளை வைத்திருந்தது. அதேபோல் ICT ஆனது வியாபார நடவடிக்கைகளில், யப்பான் சர்வதேச கூட்டுத்தாபன முகவராண்மை (JICA) சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை (Sida) மற்றும் ஏனைய உதவி நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்து அதிகளவிலான வளங்களைப் பெற்று அவற்றை இலகுபடுத்தியது.

இந்த இணைப்பானது கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம் (UCSC) 2002 ஆம் ஆண்டு செம்ரெம்பர் 1 ஆம் திகதி பிறப்பதற்கு வழிகோலியது. பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க இதன் (UCSC) நிர்மாணப் பணிப்பாளரானதுடன், அவரது தூரநோக்குச் சிந்தனையானது UCSC ஐ பல வழிகளிலும் வெற்றியடைய வழிவகுத்தது. எல்லாவற்றின் மூலமாகவும் UCSC ஆனது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திலே (ICT) சிறப்பு வாய்ந்த மத்திய நிலையமாக இலங்கையின் பல்கலைக்கழக முறைமையில் நிலைநிறுத்திக்கொள்ள முடிந்துள்ளது.

### கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) நிருவாகக் கட்டமைப்பு

இவ் வருடத்திலும் மூன்று திணைக்களங்களையும் ஆறு மத்திய நிலையங்களையும் கொண்டு தனது செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் செயற்படுத்தலை தொடர்ந்து நடாத்தி வருகின்றது.

### கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) திணைக்களங்கள்

பட்டதாரி கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்திற்கான அரச நிதியினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் கொழு. பல். கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) நேரடியாகப் பெற்றுக்கொள்கிறது. ஆண்டினுள் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பெறப்படும் நிதி போதாமையினால் உருவாக்கப்பட்ட வருமானமும் பட்டதாரி கல்விசார் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. கொழு. பல்கலை. கணினிக் கற்கை நிறுவகத்திற்கு (UCSC) மூன்று கல்விசார் திணைக்களங்கள் இருப்பதுடன் அவற்றுக்கான கல்விசார் ஆளணியினர் அவர்களது சிறப்புத்தேர்ச்சி மற்றும் கற்பித்தல் திறமை அடிப்படையில் இத் திணைக்களங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். பட்டதாரி, பட்டப் பின்படிப்பு மற்றும் வெளிவாரி மற்றும் நீடிப்பு நிகழ்ச்சிகளை கவனிப்பதற்காக நிகழ்ச்சிகளை வழங்காத மூன்று திணைக்களத் தலைவர்கள் அவற்றுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். மூன்று திணைக்களங்களும் முறையே,

1. கணினி மற்றும் புத்திக்கூர்மை முறைமைகள் (CIS)
2. தொடர்பாடல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பங்கள் (CMT)
3. தகவல் முறைமை எந்திரவியல் (ISE) என்பவையகும்.

## கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) மத்திய நிலையங்கள்

கொழு. பல். கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) பல இடைநிலை செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. அச் செயற்பாடுகள் ஆறு தனித்தனி மத்திய நிலையங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒருங்கிணைப்பாளாகள் ஒருவர் இருப்பதுடன், அவர் நாளாந்த தொழிற்பாடுகளை முகாமை செய்வார். ஆறு நிலையங்களும் பின்வருமாறு-

1. உயர்தர டிஜிடெல் பல்லூட நிலையம் (ADMTC);
2. கணினியியல் சேவைகள் நிலையம் (CSC);
3. வெளிவாரி பட்டங்கள் நிலையம் (EDC);
4. ஈ-லேனிங் நிலையம் (eLC);
5. தொழிற்றுறை அபிவிருத்தி நிலையம் (PDC);
6. டிஜிடெல் வழக்குத் தடயலியல் நிலையம் (CDF).

## ஆட்சி

கூட்டாட்சித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொழு. பல். கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) செயற்பாடுகளின் பிரதான பகுதிகளாக கல்வி, ஆய்வு, ஆலோசனை மற்றும் சமூகப்பொறுப்பு என்பனவாகும். இவற்றுள் கொழு. பல். கணினிக் கற்கை நிறுவகத்தை (UCSC) ஏனைய ICT கல்வித் துறையிலிருந்து வேறுபடுத்துவதும் ஏனைய மூன்று தூண்களுக்கு ஆதரவளிப்பதுமான பிரதான தூணாக ஆய்வு இனங்காணப்பட்டுள்ளது. இந்தத் தூண்கள் பிரதான இரு மூலங்களினால் ஆதரவளிக்கப்படுகின்றன. அவை, மனித மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு/வளங்கள் மற்றும் நிருவாக/நிதிச் சேவைகள் ஆகும். அதற்கும் மேலாக இந்த எல்லாத் துறைகளின் நல்லாட்சிக் 'கூரை' மூலம் எதிர்பார்ப்புக்கள் ஒன்றாக சேர்க்கப்பட்டு கண்காணிப்புச் செய்யப்படுகிறது.

## முகாமைத்துவம்

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) முகாமைத்துவமானது திணைக்களத் தலைவர்களினதும் மத்திய நிலைய ஒருங்கிணைப்பாளர்களினதும் ஒத்துழைப்புடன் UCSC இன் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. UCSC இன் சட்டவாக்க மற்றும் தெரிவுக் குழுக் கூட்டங்களில் பணிப்பாளர் தலைமை வகிப்பார்.

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) அலுவலர்கள்

**பணிப்பாளர்**: பேராசியர் ஜீ.என். விக்கிரமநாயக்க

**பிரதிப் பணிப்பாளர்**: பேராசிரியர் என்.டீ. கொடிக்கார;

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) திணைக்களத் தலைவர்கள்

CIS: திரு. ஜீ.பீ. செனவிரத்ன; CMT: திரு. ஜீ.கே.ஏ. டயஸ்; ISE: கலாநிதி டீ.டீ. கருணாரத்ன;

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) மத்திய நிலைய ஒருங்கிணைப்பாளர்கள்

ADMTC: திரு. எஸ்.ரீ. நந்தசார; CSC: திரு. எல்.பீ. ஜயசிங்ஹ; EDC: திருமதி எஸ்.பீ. ஆரியரத்ன; eLC: கலாநிதி கே.பீ. ஹேவாகமகே; PDC: கலாநிதி எஸ்.எம்.கே.டீ. அருணதிலக்க; CDF: திரு. கே.எஸ். குணதிலக்க.

***அதிகாரங்கள்***

கற்கை நிறுவகத்தில் அதிகாரமளிப்பவர்கள் முகாமைத்துவ சபை; கல்வி பிரதிகள் குழு; கற்கைகள் சபை; கற்கை திணைக்களங்கள் மற்றும் மத்திய நிலையங்கள்.

**முகாமைத்துவ சபை**

முகாமைத்துவ சபையின் மாதாந்தக் கூட்டங்கள் 12 மற்றும் விசேட கூட்டங்கள் 3 இவ்வாண்டில் நடத்தப்பட்டன. முகாமைத்துவ சபையின் உள்ளடக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர் (தலைவர்); பிரதிப் பணிப்பாளர்; திணைக்களத் தலைவர்கள் (CIS/CMT/ISE); **நியமனம் பெற்றவர்/செயலாளர், உயர் கல்வி அமைச்சு**: திரு. பியசேன ரனேபுர; **நியமனம் பெற்றவர்/நிதி அமைச்சு**: திரு. ஆர். உடுவாவல (மே வரை), திரு. பீ.ஏ. டயஸ் (யூலை முதல்); **பீடாதிபதி, விஞ்ஞான பீடம்**: பேராசிரியர் ரீ.ஆர். ஆரியரத்ன மற்றும் பேராசிரியர் கே.ஆர்.ஆர். மஹானாம (பதில் பெப்பிரவரி-மே); **கொ.பல்.கழக (UOC) சபையின் நியமனம் பெற்றவர்கள்**: திரு. சீ. மாலியத்த மற்றும் திரு. எச்.எம்.என். வரகஉல்லே; **கொ.பல்.கழக (UOC) செனட் சபை நியமனம் பெற்றவர்கள்**: பேராசிரியர் கே.எச். தென்னகோன் மற்றும் பேராசிரியர் பீ.எஸ்.எம். குணரத்ன; **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) நியமனம் பெற்றவர்கள்**: திரு. எஸ். முதலிகே மற்றும் தேசமானிய திரு. எம்.டீ.டீ. பீரிஸ்; **தகவல் தொழில்நுட்பத் (IT) துறை பிரதிநிதிகள்**: திரு. மனோ சேகரம் மற்றும் திரு. டீ.பி. சபரமாது; **UCSC இன் கல்வி பிரதிநிதிகள் குழு நியமனம் பெற்றவர்கள்**: கலாநிதி டீ.என். ரணசிங்ஹ, கலாநிதி ஜீ.டீ.எஸ்.பீ. விமலரத்ன, கலாநிதி எம்.சீ. ஜயவர்தன (யூலை வரை), கலாநிதி டீ.ஏ.எஸ். அத்துகோரல (செப்டம்பர் முதல்); முன்னாள் பணிப்பாளர் (அழைக்கப்பட்டவர்): கலாநிதி ஏ.ஆர். வீரசிங்ஹ.

முகாமைத்துவ சபைக்கு இரு உப குழுக்களான நிதி மற்றும் முகாமை குழு, கணக்காய்வுக் குழு என்பன உதவுகின்றன. வருடத்தினுள் இரு குழுக்களினதும் முறையே 3 மற்றும் 4 கூட்டங்கள் நடைபெற்றன. இரு குழுக்களினதும் உள்ளடக்கம் கீழே தரப்பட்டுள்ளன.

**நிதி மற்றும் முகாமை குழு**

பணிப்பாளர் (தலைவர்); பிரதிப் பணிப்பாளர்; திரு. பியசேன ரனேபுர; திரு. ஆர். உடுவாவல (மே வரை), திரு. பீ.ஏ. டயஸ் (யூன் முதல்); பேராசிரியர் ரீ.ஆர். ஆரியரத்ன; தேசமானிய திரு. எம்.டீ.டீ. பீரிஸ்.

**கணக்காய்வுக் குழு**

திரு. சுஜீவ முதலிகே (தலைவர், நிதி நிபுணவியலாளர்), பிரதிப் பணிப்பாளர், திரு. சீ. மாலியத்த; திரு. பியசேன ரனேபுர; திரு. ஆர். உடுவாவல (மே வரை), திரு. பீ.ஏ. டயஸ் (யூன் முதல்), Ms. எஸ். சுனந்தா (கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி), உள்ளக்க் கணக்காய்வாளர்கள் (E&Y).

**கல்வி பிரதிநிதிகள் குழு**

கல்வி பிரதிநிதிகள் குழுவின் 12 கூட்டங்கள் இவ்வாண்டில் நடாத்தப்பட்டன. கல்வி பிரதிநிதிகள் குழுவின் உள்ளடக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர்; பிரதிப் பணிப்பாளர்; திணைக்களத் தலைவர்கள் (CIS/CMT/ISE); மத்திய நிலைய ஒருங்கிணைப்பாளர்கள் (ADMTC/CSC/EDC/eLC/PDC); **நியமனம் பெற்றவர் (விஞ்ஞான பீடம்):** பேராசிரியர் ஆர்.டீ. விஜேசேக்கர; **பிரதிநிதிகள்/தகவல் தொழில்நுட்பத்துறை (IT):** கலாநிதி ஆர்.ஏ.சீ. ரணசிங்ஹ; சிரேஷ்ட கல்வியாளர்கள் (UCSC); **கற்பித்தல் பணியாளர்கள் இருவர்:** திரு. எம்.பீ.எம்.கே. சில்வா, திரு. டபிள்யூ.எம்.ஆர். வீரசூரிய (மே வரை); கலாநிதி எச். யூசுப்.

**கற்கைகள் சபை**

IUD, RHD மற்றும் EEP எனும் பெயரில் மூன்று கற்கை சபைகள் காணப்படுகின்றன. அவை உள்ளக பட்டதாரிப் பட்டங்கள் (IUD), ஆய்வு மற்றும் உயர் பட்டங்கள் (RHD) அத்துடன் வெளிவாரி மற்றும் நீடிப்பு நிகழ்ச்சிகள் (EEP) என்பனவாகும். இந்த வருடம் இச் சபைகள் மூன்றும் முறையே 10, 11 மற்றும் 11 கூட்டங்களை நடத்தியுள்ளன.

## நிகழ்ச்சித்திட்டங்களும் மாணவர்களும்

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) பல்வேறு மட்டங்களில் விரிவான முறையில் பல வகைப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது. UCSC இனால் நடாத்தப்படும் கற்கைநெறிகளை (நிகழ்ச்சித்திட்டங்களை) மாணவர்கள் மற்றும் ஈடுபட்டுள்ள ஆளணியினருடன் அட்டவணை 1 இனங்காட்டுகிறது

அட்டவணை 1 : வழங்கப்படும் கற்கைநெறிகள் வகை

| கற்கைநெறி | மொத்த மாணவர்கள் | மொத்தக் கல்விசார் ஆளணியினர் | மொத்தக் கல்விசாரா ஆளணியினர் |
|---|---|---|---|
| பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சிகள் | 1,072 | 48 | 62 |
| ஆய்வு மற்றும் ஏனைய கருத்திட்டங்கள் | 53 | 13 | 10 |
| விரிவாக்கல் கற்கைநெறிகள் | 309 | 22 | 28 |
| வெளிவாரிப் பட்டப்படிப்பு | 5,778 | 55 | 34 |
| இணையம் மூலம் | 13,814 | 15 | 15 |
| ஏனையவை - விஞ்ஞான பீடம் | 1,275 | 20 | 2 |

## பட்டப் படிப்பு

பட்டதாரிகளுக்கான கணினிக் கல்வியானது முதன்முறையாக 1967 இல் விஞ்ஞான பீடத்தின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC), 1275 விஞ்ஞான பீட மாணவர்களுக்கு இந்த வாய்ப்பினை வழங்கி வருகிறது. 1990 இல் கணினியியல் ஒரு பட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. எல்லாமாக 2044 மாணவர்கள் UCSC இனால் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். UCSC ஆனது தற்போது 494 மாணவர்களுக்கு கணினி விஞ்ஞானம் (CS) பட்டப்படிப்பையும், 275 மாணவர்களுக்கு தகவல் முறைமைகள் (IS/ICT) பட்டப்படிப்பையும் வழங்கி வருகின்றது.

**உள்வாரிப் பட்டங்கள்**

பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் உத்தேச மீளமைத்தலானது பல்கலைக்கழக மானியங்கள் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் அமுலாக்கமானது 2012/2013 கல்வியாண்டிலிருந்து நடைமுறைக்கு வருகின்றது.

பின்வரும் பட்டதாரிப் பட்டங்களை வழங்கும் வகையில் கணினி விஞ்ஞான இளமாணிப் பட்டமானது மீளமைக்கப்பட்டது. உலகளாவிய ரீதியிலான தகவல் தொழில்நுட்பம் (IT), தகவல் முறைமை (IS) மற்றும் கணினி விஞ்ஞானத் தொழில்வல்லுநர்களுக்கான பெருமளவான

கேள்வியினை ஈடுசெய்வற்கு மேலதிகமாக, எதிர்பார்க்கப்படும் பட்டதாரித் தகைமைகளை அடைந்துகொள்ளும் வகையிலும் மற்றும் IEEE/ACM பாடத்திட்ட சிபாரிசுகளுக்கு இணங்கும் வகையிலும் உத்தேச பாடத்திட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

(i) கணினி விஞ்ஞானம் பற்றிய விஞ்ஞானமாணிப் பட்டம் (BSc in CS) – மூன்று வருடம்;

(ii) கணினி விஞ்ஞானம் பற்றிய விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (BSc Hons. in CS) – நான்கு வருடம்;

(iii) மென்பொருள் பொறியியல் பற்றிய விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (BSc Hons. in SE) – நான்கு வருடம்.

வியாபாரத் தேவைகளுக்கும் தொழில்நுட்பத் தீர்வுகளுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்காக புதியதொரு வகை தகவல் தொழில்நுட்ப (IT) தொழில்வல்லுநர்களை உருவாக்கும் வகையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி நிகழ்ச்சியானது (BICT) தகவல் முறைமைகள் இளமாணி பட்டமாக மீளமைக்கப்பட்டுள்ளது. இந்த தகவல் முறைமைள் (IS) பட்டப்படிப்பு நிகழ்ச்சியானது புதிய வகை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) வல்லுநர்களை உருவாக்குவதற்காக வடிமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியின் பாடத்திட்டமானது தொடர்பாடல் மற்றும் குழுவேலை போன்ற மென்திறன்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

இந்த நிகழ்ச்சியின் கீழ் பின்வரும் பட்டதாரிப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன:-

(i) தகவல் முறைமைகள் பற்றி விஞ்ஞானமாணிப் பட்டம் (BSc. in IS) – மூன்று வருடம்

(ii) தகவல் முறைமைகள் பற்றிய விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (BSc. Hons. In IS) – நான்கு வருடம்.

பட்டப்படிப்பு நிகழ்ச்சியானது தற்போதுள்ள 3 வருட மற்றும் 3+1 (4 வருட) நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக 2+1 (3 வருட) மற்றும் 2+2 (4 வருட) பட்டங்களாக மீளமைக்கப்பட்டுள்ளன. புதிய தகவல் முறைமைள் (IS) பிரிவு நிகழ்ச்சி தற்போதுள்ள 3 மற்றும் 4 வருட கணினி விஞ்ஞான (CS) நிகழ்ச்சிக்கு மேலதிகமாக 4 வருட மென்பொருள் பொறியியல் (SE) கற்கைத் துறையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேற்படி மாற்றங்களுக்கு ஏற்ப கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) வழமையாக வழங்கும் நான்கு உள்ளகப் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக 2013 இல் இருந்து ஆறு நிகழ்ச்சிகளை வழங்கவேண்டியுள்ளது.

2013 ஆண்டு செயற்படுத்தப்பட்ட கணினி விஞ்ஞானப் பிரிவு பட்டதாரி நிகழ்ச்சியின் கீழ் 1ஆம் மாணவர்களுக்கு கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி (BSc. in CS) பட்டமும், 2ஆம் மற்றும் 3ஆம் ஆண்டு மாணவர்களுக்காக கணினி விஞ்ஞான இளமாணி (BCS) பட்டமும் நடாத்தப்பட்டன. 4ஆம் ஆண்டு மாணவர்களுக்காக கணினி விஞ்ஞானத்தில் இளமாணி (BSc. in CS)

பட்டமும் நடாத்தப்பட்டன. கணினி விஞ்ஞான (CS) பிரிவிற்காக உயர் தர (A/L) பௌதிக விஞ்ஞான துறையிலிருந்து மாணவர்கள் தெரிவு செய்யப்பட்ட அதேவேளை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பட்டப் படிப்பு பிரிவு சகல துறைகளை சேர்ந்தவர்களுக்கும் திறந்துள்ளது.

தகவல் முறைமைகள் பிரிவின் கீழ், 1ஆம் ஆண்டு மாணவர்களுக்காக விஞ்ஞானத்தில் தகவல் முறைமைகள் இளமாணி (BSc. in IS) பட்டமும், 2ஆம் மற்றும் 3ஆம் ஆண்டு மாணவர்களுக்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி (BICT) பட்டமும் கற்பிக்கப்படுகிறது. 4ஆம் ஆண்டு மாணவர்களுக்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளமாணி (BSc. In ICT) பட்டம் கற்பிக்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சியின் பாடத்திட்டமானது தொடர்பாடல் மற்றும் குழுவேலை போன்ற மென்திறன்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. உயர் தர அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கும் திறந்துவிடப்பட்டுள்ளதனால், மாணவர்கள் தகைமை பெறுவதற்கு நுண்ணறிவுப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**அனுமதிக்காக உள்வாங்குதல்**

2012/2013 உள்வாங்கலின் கீழ் UCSC ஆனது கணினி விஞ்ஞான பட்டப்படிப்புக்கு 153 மாணவர்களைச் சேர்த்துக்கொண்ட அதேவேளை, தகவல் முறைமைகள் பட்டப்படிப்புக்கு 101 மாணவர்களையும் 2012/2013 கல்வியாண்டில் சேர்த்துக்கொண்டது. UCSC இல் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 769 ஆக 2013 இல் காணப்பட்டது. இதுபற்றிய வகைப்படுத்தல்கள் அட்டவணை – 2 இல் தரப்பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்பத் தொழிற்றுறையில் புகழ்மிக்க பல வணிக நிறுவனங்கள் பயனளிக்கத்தக்க ஒப்பந்தங்களின் அடிப்படையில் 3ஆம் ஆண்டு பட்டப்படிப்பு நிகழ்ச்சியினை தொடருகின்ற அநேகமான மாணவர்களை அவர்களின் 3ஆம் ஆண்டு தொழிலிலமர்த்துதல் முடிவடைய முன்னரே ஆட்சேர்ப்புச் செய்வதை அவதானிக்க முடிந்தது. இம் மாணவத்தொகுதியில் மீளவும்கற்ற எட்டுப் பேரும் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

அட்டவணை 2 : உள்வாரிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகள்

| பாடநெறி | 2012 இன் அனுமதி | 1 ஆம் வருட மாணவர் | 2 ஆம் வருட மாணவர் | 3 ஆம் வருட மாணவர் | 4 ஆம் வருட மாணவர் | மொத்தம் | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி | 153 | 153 | - | - | - | 153 | - |
| கணினி விஞ்ஞானமாணி | - | - | 155 | 146 | - | 301 | 97 |
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி | 40 | - | - | - | 40 | 40 | 39 |
| தகவல் முறைமையில் விஞ்ஞானமாணி | 101 | 101 | - | - | - | 101 | - |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி | - | - | 78 | 76 | - | 154 | 56 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி | 20 | - | - | - | 20 | 20 | 20 |
| UCSC இன் பட்டதாரி மாணவர்கள் | **314** | **254** | **233** | **222** | **60** | **769** | **212** |
| விஞ்ஞானமாணி, விஞ்ஞானப் பீடம் | - | 520 | 430 | 285 | 40 | 1275 | - |
| உள்வாரிப் பட்டதாரி மாணவர்கள் | **316** | **774** | **663** | **507** | **100** | **2044** | **212** |

எல்லாப் பாடநெறிகளும் ஆங்கில மொழி மூலமாகவே நடைபெறும்

**வருகைதரும் ஆளணியினர்**

உள்வாரிப் பட்டப்படிப்பை வழங்குவதில் எல்லா கல்விசார் மற்றும் கல்விசார் ஆதரவு பணியாளர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பட்ட நிகழ்ச்சியில் வெளியக வளங்களை வேண்டி நிற்கும் பாடநெறிகள் பல உள்ளடங்கியுள்ளன. 10 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு வருகைதரும் விரிவுரையாளர்கள் 12 பேரை அழைத்துள்ளது.

**தொழிற்றுறையில் அமர்த்துதல்**

தொழிற்றுறை அபிவிருத்தி நிறுவனமானது (PDC), தகவல் தொழில்நுட்ப தொழிற்றுறையுடன் நெருங்கிய உறவு மற்றும் பட்டதாரிகளின் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காக கல்வி நிகழ்ச்சிகளின் முன்னேற்றத்தை தொழிற்றுறை தொடர்பின் ஊடாக தொடர்ச்சியாக பேணிச்செல்கிறது. PDC ஆனது இவ்வாண்டில் அவர்களது 6 மாதப் பயிற்சிக்காக பட்டதாரி மாணவர்கள் 218 பேரை 76 நிறுவனங்களில் அமர்த்தியுள்ளது. இதில், Linnaeus-Palme மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் Umea பல்கலைக்கழகத்துடன் UCSC மாணவர்கள் இருவர் இணைப்புச் செய்யப்பட்டதும் உள்ளடங்கும். Umea பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் இலங்கையில் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைப்புச் செய்யப்பட்டனர். பட்டதாரியான பின்னர் தொழிற்றுறையில் நிபுணரொருவராக எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதை பட்டதாரி மாணவர்கள் அறிந்து கொள்வதற்காக சிறப்புக் கருத்தரங்கு தொடர்களை PDC ஆனது கம்பனிகளில் சுயமாக நடாத்த ஏற்பாடு செய்கிறது. இம் மாணவர்கள் இருவருக்கும் கடன் வசதிகள் ஏற்பாடு செய்துகொடுக்கப்பட்டது. பட்டதாரி மாணவர்கள் உள்ளகப் பயிற்சிக்கு அனுப்பப்பட முன்னர் சூழ்நிலைக்கு தக்கவாறு செயற்படுதல் மற்றும் தயார்படுத்தப்படுதல் போன்ற சிறந்த விரிவுரைகள் மூலமாக வழங்கப்படுகின்றன. அவர்களின் உள்ளகப் பயிற்சியின்போது எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களும் திறன்களும் தெளிவாகக் கலந்துரையாடப்படுகின்றன.

தொழிற்றுறைப் பயிற்சிக்கு மேலதிகமாக PDC யினால் 4ஆம் வருட மாணவர்களுக்கு அவர்களது தொழிலில் 'கால்பதித்து நிற்க' மிகவும் அவசியமான மென்திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் மென்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றை ஒழுங்குசெய்து நடாத்தியது. சமர்பித்து

உரையாற்றும் திறன், தொடர்பாடல் திறன், குழுக் கட்டமைப்பு, நேர முகாமை, மன அழுத்த முகாமை, தனிப்பட்ட பெறுபேறுகள், முரண்பாடுசார் ஆலோசனைகள், பிரச்சினைக்கான தீர்வுகள், கூட்டாட்சி கலாசாரம், தலைமைத்துவத் திறன்கள் மற்றும் தொழிற்றுறைசார் திறன்கள் இதில் கவனத்தில் கொள்ளப்பட்ட பகுதிகளாக உள்ளடங்கியிருந்தன. மாணவர்களுக்காக தொழில்சந்தை, கைத்தொழிற்றுறை விஜயம், மாநாடுகள் மற்றும் ஒன்றுகூடல் தொடர்பாடல் ஏற்பாடு செய்தல் என்பன ஏனைய செயற்பாடுகளாக காணப்பட்டன. 2013 திசம்பர் மற்றும் 2014 சனவரி மாதங்களில் மாணவர்கள் தமது இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வதற்காக ஒக்ரோபர் 31 ஆம் திகதி தொழில் வாய்ப்புச் சந்தையொன்று நடாத்தப்பட்டது.

### மாணவர் நலன்புரி

மடிக்கணினி (laptop) ஒன்று தேவையான முதலாம் ஆண்டு மாணவரொருவருக்கு அவுஸ்ரேலியாவிலுள்ள நன்கொடையாளரொருவரினால் யூன் 26 ஆம் திகதி அன்பளிப்புச் செய்யப்பட்டது.

### விடுதி

கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் கடைப்பிடிக்கப்படும் கொள்கைக்கிணங்க, 2013 ஆண்டிலும் மிகவும் தேவையுள்ள முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு இருப்பிட வசதிகள் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தினால் (UCSC) வழங்கப்பட்டன. இதற்காக பின்வரும் விடுதிகள் வாடகைக்கும் குத்தகைக்கும் எடுக்கப்பட்டன. முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான ஆண்கள் விடுதி கிருலப்பனையிலும், முதலாம் ஆண்டு மாணவிகளுக்கான பெண்கள் விடுதி கொகுவலையிலும் முறையே 40 மாணவர்களுக்கும் 30 மாணவிகளுக்கும் வசதியேற்படுத்திக் கொடுத்துள்ளது.

### சிற்றுண்டிச்சாலை

பல்கலைக்கழக வளாகத்தினுள் தற்போது இயங்கிவரும் பல சிற்றுண்டிச்சாலைகளுக்கு மேலதிகமாக, மீளாய்வாண்டின் போது UCSC ஆனது விசேடமாக தனது மாணவர்களுக்கென தனியானதொரு சிற்றுண்டிச்சாலையினை பேணிச்சென்றது. புதிய சிற்றுண்டிச்சாலை நிர்மாண வேலைகள் கூட இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

### மாணவ ஆலோசனையளித்தல்

மாணவர்கள் சகலருக்கும் நான்கு மாணவ ஆலோசகர்களின் (இரு விரிவுரையாளர்கள் மற்றும் இரு சிரேஷ்ட விரிவுரையாளர்கள்) சேவை வழங்கப்படுகின்றது. அத்துடன், ஆலோசனை தேவையான மாணவர்கள் வாரத்தில் 3 மணித்தியாலங்களுக்கு தொழில்சார் ஆலோசகரொருவரின் சேவையைப்

பெற்றுக்கொள்ள வசதியளிக்கப்பட்டுள்ளது.

### பட்டப்படிப்பு மாணவர்களுக்கான நிதியுதவி

மஹாபொல புலமைப்பரிசில், உதவித்தொகை (Bursaries) தொழிற்றுறை புலமைப்பரிசில் மற்றும் தனிப்பட்ட புலமைப்பரிசில் போன்ற வகைகளில் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

#### மஹாபொல புலமைப்பரிசில்

வர்த்தக மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அமைச்சினது மஹாபொல நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் 320 மாணவர்களுக்கு மஹாபொல புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. விசேட மற்றும் சாதாரண புலமைப்பரிசில்களின் பெறுமதி முறையே ரூ. 2,550/= மற்றும் ரூ. 2,500/= ஆகும்.

#### உதவித்தொகைகள்

உதவித்தொகைக்கு தகுதியான மாணவர்களை தெரிவு செய்வதை விளக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு இணங்க உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. 2013 இல் உதவித்தொகைகளைப் பெற்ற மாணவர்களின் விவரம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. முழுமையான உதவித்தொகை மற்றும் அரை-உதவித்தொகை என்பவற்றின் பெறுமதி முறையே ரூ. 2,000/= மற்றும் ரூ. 1,900/= ஆகும்.

மஹாபொல மற்றும் உதவித்தொகை என்பவற்றைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் பின்வம் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| உள்வருகை ஆண்டு | கற்கும் ஆண்டு | மஹாபொல புலமைப்பரிசில் வழங்கப்படுவோர் | உதவித்தொகை பெறுவோர் |
|---|---|---|---|
| 2012 | 1ஆம் ஆண்டு | 116 (45%) | 30 (12%) |
| 2011 | 2ஆம் ஆண்டு | 109 (47%) | 26 (11%) |
| 2010 | 3ஆம் ஆண்டு | 85 (38%) | 26 (12%) |
| 2009 | 4ஆம் ஆண்டு | 20 (33%) | 04 (07%) |

#### தொழிற்றுறை புலமைப்பரிசில்கள்

மில்லேனியம் இன்பொமேஷன் டெக்னோலஜீஸ் லிமி. (MIT); நவான்டிஸ் ஐரீ (பிரை.) லிமி.; ஐஎப்எஸ் ஆர் & டீ லிமிடெட் (IFS); மற்றும் எம்ஐஎன்டீ (MIND) எனும் பெயருடைய நான்கு வெளிவாரி நிறுவனங்கள் தேவையுள்ள மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு அனுசரணை வழங்கின.

### 'சொரியா றோபஸ்ரா' புலமைப்பரிசில்

முன்னாள் கணினி விஞ்ஞான விசேட பட்ட நிகழ்ச்சி பட்டதாரி சங்கத்தினால் நான்காம் வருட பட்டதாரி மாணவர்களுக்காக 'சொரியா றோபஸ்ரா' எனும் பெயருடைய விசேட புலமைப்பரிசில் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்ததப்பட்டது. 2013 ஆம் ஆண்டு இதன் கீழ், இரண்டு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், இப் புலமைப்பரிசிலின் பெறுமதி கல்வியாண்டின் 10 மாதங்களுக்கு 2,500/= ரூபா மாதாந்தம் கொண்டதாகும். இதற்காக தகுதியானவர்கள் கல்விசார் செயற்திறன் மற்றும் நிதியுதவி தேவைப்பாட்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர்.

### UCSC மாணவர் சங்கம்

2002 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவக (UCSC) கட்டளைச்சட்டத்தின் 25 மற்றும் 26 ஆம் உபபிரிவுகளின் பிரகாரம் மாணவர் சங்கத்தின் 2012/13 ஆண்டுக்கான தேர்தல் நடைபெற்றதுடன், நிருவாகக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. பிடீஎச்கே ஜயமான்ன; உப தலைவர்: திரு. டீவீபிசீ ஜயசிங்ஹ; செயலாளா: திரு. எஸ்ஆர் முதுதந்திரிகே; பதிப்பாசிரியர்: திரு. ஜேபீடீஎஸ் ஜயசிங்ஹ; கனிஷ்ட பொருளாளர்: திரு. வீஏ இசுறு; குழு அங்கத்தவர்கள்: திரு. எஸ்கே வல்பிட; திரு. எம் சதீஸ்; திரு. எம்எச் ஹம்சா; திரு. பிசீ சேனாரத்ன; திரு. ஈஎன் ஜயசூரிய; திரு. எம்எம்எம் ஷிபான்; திரு. ஈஏகேஏ எதிரிசூரிய; திரு. எச்ஏஎன்டீ ஹெட்டிஆரச்சி. திரு. எம்ஜீஎன்ஏஎஸ் பெர்னாந்து சிரேஷ்ட பொருளாளர் பதவியை தொடருகின்றார்.

### மாணவர்களின் செயற்பாடுகள்

பிரதானமாக கலாசாரம், சம்பிரதாயம் மற்றும் பொழுதுபோக்கு என்பவற்றினை மேம்படுத்துவதற்காக மாணவர் கழகங்களினால் மாணவர் செயற்பாடுகள் நடாத்தப்பட்டன. புகுமுக மாணவர்களின் வரவேற்பு நிகழ்வு (நவம்பர், 3); பிரித் சமய வைபவம் (சனவரி, 27); விளையாட்டு விழா; 'பதுறு சஜய' இசைநிகழ்ச்சி (மே, 31); இரத்த தான நிகழ்ச்சி; சுழலும் விளக்குகளினாலான கூட்டுடன் வெசக் அலங்காரம்; பிரியாவிடை வைபவம்; கிறிஸ்மஸ் மடுவம் மற்றும் கரோல் கீதம்; பொசன் அன்னதானம் மற்றும் பக்தி கீத வைபவம்; வாணி விழா வைபவம்; மாணவ குழுச் சுற்றுலா என்பன இச் செயற்பாடுகளில் உள்ளடங்கும். கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை (UCSC) நிறுவக மாணவர்கள் பல செயலமர்வுகளை UCSC இலும், கல்விப் பொதுத்தராதர (சா/த) மற்றும் (உ/த) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உதவுவதற்காகப் பாடசாலைகளிலும் நடாத்தியது.

### மாணவர்களின் அடைவுகள்

மாணவர்கள், மூன்றாம்நிலை கல்வி (வியாபார) பிரிவிற்கான **தேசிய சிறந்த தராதர ICT** (NBQSA)

**தங்க விருதினை** வென்றனர்: ஆர். ராஜபக்ஷ, ஏ.கே. மடுகல்ல, பீ.ஐ.யூ. அமரசிங்ஹ மற்றும் வீ.எச். பத்மதிலக்க ஆகியோர், “முகID: இலங்கையில் தடயலியல் முக, மறுசீராக்கத்திற்கு முகத் தசை உடற்கூறு அடிப்படையிலான தீர்வு” என்பதற்கும்; NBQSA மூன்றாம்நிலை கல்வி (தொழில்நுட்பம்) பிரிவிற்கான **வெண்கல விருதினை** வை.எம்கே. பிரியதர்ஷன, “மொபைலின் மூலம் சுற்றுச் சூழலை உணர்தல்: கட்புலனற்றோர் அணியக் கூடிய தடைகளை கண்டறியும் முறைமை” என்பதற்கும்; NBQSA மூன்றாம்நிலை கல்வி (தொழில்நுட்பம்) பிரிவிற்கான **சிறப்பு விருதினை** எஸ். சாந்தினி, டீ. கிரிஎல்ல மற்றும் கே. ரணசிங்ஹ ஆகியோர், “Swaraloka (இலங்கையில் கட்புலனற்றோருக்கான தகவமைக்கக்கூடிய இசை கெலிப்பெண் பயிற்றுவிப்பாளர்)” என்பதற்கும்; NBQSA மூன்றாம்நிலை கல்வி (வியாபார) பிரிவிற்கான **சிறப்பு விருதுகள்** இரண்டினை என்.ரீ. பெரேரா, எம்.எம். விஜேசூரிய, ஐ.எஸ். விஜேரத்ன ஆகியோர், “விசேட தேவையுடைய மாணவர்களுக்கான ICT அடிப்படையிலான கல்வி” மற்றும் எஸ்.டீ.டபிள்யூ. குணவர்தன, பீ.எம். டி சில்வா மற்றும் டீ.எஸ்.பி. குலதுங்க ஆகியோர், முதன்மைத்தாக்க இயக்கவியல் மற்றும் கோல மாறுபாடுகளை பயன்படுத்தி ஊடுருவாது மனித மனவழுத்தத்தை கண்டறிதல்” என்பதற்கும் பெற்றனர்.

ஹொங்கொங்கில் நடைபெற்ற ஆசியா பசுபிக் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விருது விழாவில் **Asia Pacific ICT Awards** (APICTA) பரிசை “மொபைலின் மூலம் சுற்றுச் சூழலை உணர்தல்: கட்புலனற்றோர் அணியக் கூடிய தடைகளை கண்டறியும் முறைமை” எனும் ஆக்கத்திற்கு வை.எம்.கே. பிரியதர்ஷன சிறப்புப் பரிசினை வென்றார். இக் கருத்திட்டமானது கலாநிதி விமலரத்ன அவர்களால் மேற்பார்வை செய்யப்பட்டது.

தன்னியக்க வழிப்படுத்தல் சக்கரநாட்காலியை உருவாக்கியதற்காக வை. லொக்கே, பீ. மதுமால், ரீ. குமார மற்றும் என். ரனசிங்ஹ ஆகியோர் **பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான புத்தாக்க சம்பியன்சிப் - 2013** போட்டியில் இரண்டாவது இடத்தை வெற்றனர்.

**IEEEXtreme** 7.0 போட்டியில் 77 குழுக்கள் பங்குபற்றியதுடன், அவற்றில் மிகச் சிறந்ததாக உலக மட்டத்தில் 185 ஆவது இடத்தையும், பிராந்தியத்தில் 55 ஆவது இடத்தையும் UCSC ஆனது பெற்றுக்கொண்டது.

மாலம்பே SLIIT நிறுவகத்தில் நடைபெற்ற **Code Fest** 2013 நிகழ்வில் UCSC இன் மாணவர்கள் இரண்டாம் இடத்தைக் கைப்பற்றிதுடன், வெள்ளிப் பதக்கத்துடன் 30,000/= பணப் பரிசினையும் வென்றனர். இந் நிகழ்வானது, SLIIT நிறுவனத்தின் கணினி கற்கைகள் பீடத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டது. இந் நிகழ்வில் UCSC இன் "LocTip" குழுவானது இந்த விருதை வெற்றிகொண்டதுடன், ஆரம்பச்சுற்றில் பங்குபற்றிய 22 பல்கலைக்கழக குழுக்களில் ஒன்றாகும்.

LocTip குழுவைச் சேர்ந்த பீ.ஏ.ஏ. ரன்திகா (2012/CS/114); எம்.எஸ். குமாரகே (2012/CS/075); எல்.ஏ.ஆர்.எச். பெரேரா (2012/CS/103); ஏ. எதிரிசூரிய (2012/IS/016); கே.கே.ரீ.பீ. ரணதுங்க (2012/CS/112) ஆகிய ஐந்து பேரும் UCSC இன் முதலாம் ஆண்டு பட்டதாரி மாணவர்களாகும்.

Sri Lanka CERT இனால் ஒழுங்குசெய்யப்பட்டு, செப்ரெம்பர் 25 ஆம் திகதி நடாத்தப்பட்ட **CERT Security Quiz** 2013 போட்டியில் UCSC இன் நான்காம் ஆண்டு மாணவர்களான எஸ். அமரசிங்ஹ, எம். அல்விஸ் மற்றும் ஏ. பெரேரா ஆகியோர் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

'Google I/O Extended Colombo – 2013' இலங்கையில் முதலாவதாக நடாத்தப்பட்ட மிக முக்கிய **Google I/O extended** நிகழ்வாகும். UCSC இன் மாணவர்கள் 1 ஆம் இடம் (எஸ்.எஸ். கருணாரத்ன) மற்றும் 2 ஆம் இடம் (ஆர். பெரேரா) ஆகியவற்றைப் பெற்றுக்கொண்ட இந்த Hackathon போட்டியானது 1-2 நாட்கள் வரையிலான காலப்பகுதியில் நடாத்தப்படுவதுடன், இதில் மாணவர்களால் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செயற்படுத்தும் மென்பொருள் நிர்மாணிக்கப்படுகின்றது.

2013 நவம்பர் 30 ஆம் திகதி கொழும்பு, சின்னமன் கிரான்ட் ஹோட்டலில் நடைபெற்ற **யுனிலிவர் சவால் – லிப்டன் திறன் வேட்டை (Unilever Challenge** - Lipton Talent Hunt) 2013 போட்டியில் UCSC இன் மாணவர்கள் இரண்டாம் இடத்தை கைப்பற்றிக்கொண்டனர். பீ. சமரகோன் (2011/CS/199); எஸ். முதுதந்திரி (2011/CS/039); என். லக்மினி (2011/ICT/029); எஸ். சுந்தரலிங்கம் (2011/ICS/038) ஆகியோர் UCSC குழு அங்கத்தவர்களாவர்.

களனிப் பல்கலைக்கழகத்தின் Gavel Club மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட நாடு முழுவதிலுமுள்ள **பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான சிறந்த பேச்சாளர் – 2013** போட்டியில் பீ. சமரகோன் (2011/CS/199) **மூன்றாம் இடத்தை** கைப்பற்றினார்.

**கவிதா** ஆற்றல் போட்டி, அறிவுமிக்க பரம்பரையின் பல்வேறு வகையான கலை ஆற்றல்களை சமர்ப்பிப்பதற்கும், விருத்தி செய்வதற்கும் மற்றும் வெளிப்படுத்துவதற்குமான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக மாணவர்களின் நிர்மாணிப்புத் திறன்களை மேம்படுத்துகின்றது. ஆண்டுக்கான, இலத்திரணியல் ஊடக – ஆக்கபூர்வமான தொலைக்காட்சி ஒளிபரப்பாளர் போட்டியில் திரு. எச்.டீ. பெரேரா (2010/ICT/032) மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

UCSC இனால் 2013 சனவரி மாதம் 10 ஆம் திகதி நடாத்தப்பட்ட e-Swabhimani -2012 விருது விழாவிலும் 4 விருதுகளை (2 வெற்றியாளர்களையும் 2 பாராட்டுச் சான்றிதழ்களையும்) வென்றனர். "கள பீரங்கி பாவிப்பு முறைமை" பற்றிய பணியாளர் ஆய்வுக் கருத்திட்டமானது ஈ-விஞ்ஞானம்

மற்றும் தொழில்நுட்பவியல் பிரிவில் வெற்றியைப் பெற்றுக்கொண்ட ஓர் ஆய்வுக் கருத்திட்டமாகும். ஏனையவை யாவும் மாணவர் கருத்திட்டங்களாகும்.

**விளையாட்டுக்கள்**

மலேசியாவில் நடைபெற்ற 8ஆவது UITM இன்டநெஷனல் ஸ்போர்ட்ஸ் பியாஸ்டா நிகழ்வில் டென்னிஸ் விளையாட்டில் ஜீ.ஏ.டீ.எம். கனேபொல (2011/ICT/027) மற்றும் பி.எல்.டபிள்யூ. விதாரண (2011/ICT/028) எனும் இரு மாணவர்கள் பங்குபற்றினர். அதே நிகழ்வில், ஜீ.கே.கே.பி. கஜநாயக்க (2012/CS/048) பட்மின்டன் பிரிவில் பங்குபற்றினார். மலேசியாவில் ஒக்ரோபர் 22 – 27 வரை நடைபெற்ற பல்கலைக்கழக படகோட்டப் போட்டியில் என்.ஏ.எஸ்.எஸ். மிஹிந்துகுலசூரிய (2010/ICT/001); எம்.பீ.சீ. பெரேரா (2011/ICT/013); சீ. த அல்விஸ் (2011/CS/032); எஸ். சந்திரசேக்கர (2011/ICT/031) ஆகியோர் பங்குபற்றினர்.

கீழே குறிப்பிடப்படும் UCSC இன் மாணவர்கள் கொழும்பு பல்கலைக்கழக அந்தந்த விளையாட்டு அணிகளுக்கு அணித்தலைவர்களாகவும் உபதலைவர்களாகவும் நியமிக்கப்பட்டதுடன், UCSC இன் குழுக்கள் 2013 ஆண்டின் வர்ண இரவு (colours night) நிகழ்வில் பின்வரும் விருதுகளையும் வென்றனர்.

**மெய்வல்லுநர் போட்டி / சுவட்டு மற்றும் கள நிகழ்ச்சி:** மெய்வல்லுநர் போட்டியில் **அனைத்து சம்பியன்ஸ்களுக்கான** திரு. டீ.பீ. எதிரிசிங்ஹ சவால் கேடயம்; மெய்வல்லுநர் (ஆ) போட்டியில் திரு. எம்.ஏ.டீ.சி.எச். மனதுங்க சவால் கிண்ணம், **பீட கேடயம்; வர்ணப் பட்டியல் (ஆ) -** எம்.ஏ.எம். பெரேரா (2010/CS/193), எம்.டபிள்யூ.எஸ்.சீ.எஸ்.வீ. விதானகே (2010/CS/044); **வர்ணப் பட்டியல் (பெ)** – கே.ஜீ.ஐ. சன்தீபனி (2011/CS/165); **அணித்தலைவர் (ஆ)** – எம்.டபிள்யூ.எஸ்.சீ.எஸ்.வீ. விதானகே (2010/CS/044); **உப அணித்தலைவர் (ஆ)** ஏ.எம். பெரேரா (2010/CS/193).

**பட்மின்டன்: வர்ணப் பட்டியல் (ஆ) –** எச்.எல்.சீ. பெரேரா (2010/CS/109); **வர்ணப் பட்டியல் (பெ) –** டீ.ஜீ.யூ. அமரசிங்ஹ (2010/CS/205), ரீ.டீ.பீ. பீரிஸ் (2010/CS/105); **அணித்தலைவர் (பெ)** ரீ.டீ.பீ. பீரிஸ் (2010/CS/105); டீ.ஜீ.யூ. அமரசிங்ஹ (2010/CS/205).

**பேஸ் போல்: வர்ணப் பட்டியல் (ஆ) –** எஸ். சுந்தரலிங்கம் (2011/ICT/038), ஐ.ஏ. விஜேசிங்ஹ (2011/CS/036).

**கரம்: வர்ணப் பட்டியல் (ஆ) –** என்.ரீ. பீரிஸ் (2010/CS/171), ஈ.டீ.எஸ்.சீ. கருணபால (2010/CS/171), ஜீ.சீ.ஈ. விதாரண (2010/CS/218); **வர்ணப் பட்டியல் (பெ) –** பீ.எம். கல்பன அஞ்சலி மாதுகொட (2011/CS/160), எச்.எச்.ஐ.டீ. புளொரன்ஸ் (2011/CS/062).

**சதுரங்க விளையாட்டு: வர்ணப் பட்டியல் (ஆ)** – டீ.சீ. மாலிமகே (2011/CS/195), ஏ.என். நெத்மிணி (2010/CS/080); சதுசரங்க விளையாட்டில் அனைத்து சம்பியன்ஸ் சாலிய பராக்கிரம நினைவுக் கேடயம்; சதுசரங்க விளையாட்டில் 1993 ஒன்றிணைக்கப்பட்ட கிளப் சவால் கிண்ணம் (ஆண்), பீட கேடயம்.

**கால் பந்து: வர்ணப் பட்டியல்** – கே.பி.ஜீ.ரீ.எம். குலசேக்கர (2011/CS/177).

**ஹோக்கி: வர்ணப் பட்டியல் (ஆ)** - ஏ.ஏ.ஜே. பகிதா (2011/ICT/017); **(பெ)** எல்.ஆர். எதிரிவீர (2010/ICT/081), பீ.எம்.எஸ்.கே. பலன்சூரிய (2010/ICT/110), சீ.கே. வடுகே (2009/ICT/067), கே.எச்.ஐ. விந்தியா (2010/ICT/063), கே.ஜீ.எச்.யூ. தேசப்பிரிய (2011/CS/208); ஹோக்கி (பெ) பிரிவு **பீட கேடயம்** Ms. ஆர். விஜேரத்ன; **உப அணித்தலைவர் (பெ)** பீ.எம்.எஸ்.கே. பலன்சூரிய (2010/ICT/110).

**கராத்தே: அனைத்து சம்பியன்சிப்**; கராத்தே சவால் கிண்ணம் **(ஆண்)**, பீட கேடயம்; **வர்ணப் பட்டியல் (ஆ)** – ஆர்.எஸ்.கே. சமரசிங்ஹ (2010/ICT/061), ஐ.ஏ.டீ.கே.சீ.டபிள்யூ. குணரத்ன, (2011/ICT/053); **(பெ)** - Ms. எல்.ஜீ.ஏ. திலங்க (2011/ICT/063); **உப அணித்தலைவர் (ஆ)** – திரு. ஐ.ஏ.டீ.கே.சீ.டபிள்யூ. குணரத்ன, (2011/ICT/053)

**வீதியோட்டப் போட்டி:** வீதியோட்டப் போட்டிக்கான UCSC சவால் கிண்ணம், பீட கேடயம்.

**துடுப்பு படகோட்டுதல்: வர்ணப் பட்டியல் – (ஆ)** என்.ஏ.என்.எஸ்.எஸ். மிஹிந்துகுலசூரிய (2010/ICT/001)

**றக்பி: வர்ணப் பட்டியல் – ஐ.என. தேவப்பிரிய** (2011/ICT/026), **ஜீ.பீ.என்.** பெரேரா (2010/ICT/058).

**நீச்சல்: சிறப்புச் சான்றிதழ் (பெ)** - Ms. ஜே.கே.ஆர்.பீ. ஜயவர்தன (2010/ICT/017); **வர்ணப் பட்டியல் (ஆ)** – ஜீ.பி.எஸ். த சில்வா (2011/CS/168); **(பெ)** - Ms. ஜே.கே.யூ.ஆர்.பீ. ஜயவர்தன (2010/ICT/017); உப அணித்தலைவர் **(பெ)** - Ms. ஜே.கே.யூ.ஆர்.பீ. ஜயவர்தன (2010/ICT/017).

**ரைகொண்டோ: வர்ணப் பட்டியல் (ஆ)** – ஏ.பீ.ரீ. விஸ்வகுல (2011/CS/049)

**டெனிஸ்: வர்ணப் பட்டியல் (ஆ)** – **எச்.எல்.சீ.** பெரேரா (2010/CS/109); **(பெ)** - Ms. ஜீ.ஏ.டீ.எம். கனேபொல (2011/ICT/027) மற்றும் Ms. பி.எல்.டபிள்யூ. விதாரன (2011/ICT/028)

**கரப்பந்தாட்டம்: 2013 – வர்ணப் பட்டியல் (ஆ)** ஆர்.எம்.கே.எச். ரணசிங்ஹ (2010/CS/175)

பட்டமளிப்பு

பட்டப்படிப்பு நிகழ்ச்சிகள் நான்கையும் சேர்ந்த 203 மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நடாத்தப்பட்டது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு நிகழ்ச்சிக்கான மாணவர்கள் உயர் தரத்தில் ஏதாவதொரு துறையிலிருந்து தெரிவு செய்யப்பட்டார்கள். இந்த மாணவர்களினது அடைவுகள் துறை ரீதியாக அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ளன.


பட்டத்தைப் பூர்த்தி செய்து ஐந்து மாதங்களில் பின்னர் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. மொத்தம் 220 பட்டதாரிகளில் ஆய்வில் பங்கேற்ற 217 (98.6%) பேரில் 199 (91.7%) பேர் ஏற்கனவே தொழில் தேடிக்கொண்டுள்ளதுடன், 6 (2.8%) பேர் கீழ்மட்ட நிலை தொழிலில் பணியாற்றும் அதேவேளை, 10 (4.6%) பேர் தொழில் வாய்ப்பின்றி உள்ளனர். தொழில் தேடிக்கொண்டுள்ளோரில் பெண்களின் வீதமானது (87%) ஆண்களை (94%) விட சிறிதளவு குறைவானதாகவும், தமிழ் (82%) மற்றும் முஸ்லிம் (80%) இரு தரப்பினரையும் விட சிங்கள மாணவர்கள் (93%) தொழில் பெற்றுள்ளமை அதிகமானதாகவும் காணப்பட்டது. தொழில் செய்யும் தனிப்பட்டவர்கள் அனைவரும் ரூ. 30,000 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளத்தையே எதிர்பார்ப்பாக கொண்டுள்ளதுடன், 8% ஆனவர்கள் ரூ. 30,000 ஐ விட குறைந்த சம்பளத்தைக் பெறுகின்றனர். தொழிலில் ஈடுபட்டுள்ளோரில் பெரும்பாலானோர் (48%) 50,000 வரையிலான சம்பளத்தை உழைப்பதுடன், சில மாணவர்கள் ரூ. 100,000 இற்கும் அதிகமாக உழைக்கின்றனர். அதிகமானவர்கள் தனியார் துறையிலே (82%) பணியாற்றுகின்றனர்.

அட்டவணை 3 - UCSC உள்வாரிப் பட்டதாரிகளின் செயலாற்றல்

| அனுமதி | முதலாம் | மேல் | கீழ் | சித்தி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| BCSc | 1 | 0 | 8 | 88 | **97** |
| BICT | 0 | 5 | 17 | 34 | **56** |
| கணிதம் | 0 | 3 | 10 | 21 | **34** |
| உயிரியல் | 0 | 0 | 5 | 6 | **11** |
| வணிகம் | 0 | 1 | 1 | 4 | **06** |
| கலை | 0 | 1 | 1 | 3 | **05** |
| BSc CS | 12 | 17 | 10 | 0 | **39** |
| BSc ICT | 6 | 11 | 3 | 0 | **20** |
| கணிதம் | 1 | 5 | 3 | 0 | **09** |
| உயிரியல் | 4 | 5 | 0 | 0 | **09** |
| வணிகம் | 0 | 1 | 0 | 0 | **01** |
| கலை | 1 | 0 | 0 | 0 | **01** |
| மொத்தம் | 19 | 33 | 38 | 122 | 212 |

உரு 1, பொறியியல் மற்றும் மருத்துவத்திற்கு நிகராக கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவக (UCSC) பட்டதாரிகளின் தொழில்வாய்ப்புத் திறன் உள்ளது என்பதைக் காட்டுகின்றது. பட்டமளிப்பு நடைபெற்று நான்கு மாதங்களின் பின் வெளிவாரிப் பட்டம் பயின்ற 172 பட்டதாரிகளில் 81% ஆனவர்கள் தொழிலில் இணைந்துள்ளதுடன், 6% ஆனவர்கள் தொழில்

தேடிக்கொண்டிருப்பவர்களாக இருப்பதாக இதுபோன்ற ஆய்வொன்று தெரிவிக்கின்றது.




உரு 1: பல்கலைக்கழகப் பட்டதாரிகளின் தொழில்பெறும் இயலுமை

**விருதுகள்**

UCSC இன் மிகச் சிறந்த சாதனையாளர் பட்டதாரிக்கான பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க பதக்கம் எல்.என். குமார் என்பவருக்கு வழங்கப்பட்டது. கணினி விஞ்ஞான பட்ட நிகழ்ச்சியில் கணினி கற்கைகளுக்கான பேராசிரியர் மொஹான் முனசிங்ஹ விருது, தொழிற்றுறைப் பயிற்சியில் சிறந்த செயலாற்றுக்கான டேவிட் பீரிஸ் குழுமத்தின் தங்கப்பதக்கம் மற்றும் சிறந்த செயலாற்றுக்கான Virtusa கல்விசார் திறன் விருது ஆகிய விருதுகளும் முறையே எல்.என் குமார், எச்.எம்.எல். தர்மசிறி மற்றும் ஆர்.ஆர்.டீ.எச். வத்சலா ஆகியோருக்கு வழங்கப்பட்டதுடன், இறுதியாண்டு சிறந்த கணினி விஞ்ஞான கருத்திட்டத்திற்கான CINTEC விருது எல்.என். குமார் என்பவருக்கு வழங்கப்பட்டது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) நிகழ்ச்சியில் எஸ்.பீ. உடல்கம, எம்.டீ.என்.ரீ. பெரேரா மற்றும் ஆர்.ஐ.எம். சாபித் ஆகியோருக்கு முறையே, சிறந்த செயலாற்றுக்கான IFS கல்விசார் திறன் விருது, தொழிற்றுறைப் பயிற்சியில் சிறந்த செயலாற்றுக்கான டேவிட் பீரீஸ் குழுமத்தின் தங்கப்பதக்கம் மற்றும் சிறந்த செயலாற்றல் மெட்ரோலா கல்விசார் திறன் விருது ஆகிய மூன்று விருதுகளும் வழங்கப்பட்டன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) நிகழ்ச்சியில் இறுதியாண்டு சிறந்த கருத்திட்டத்திற்கான சம்பத் வங்கி விருது முறையே பீ.ஐ.யூ. அமரசிங்ஹ, ஏ.கே. மடுகல்ல, வீ.எச். பத்மதிலக்க மற்றும் ஆர்.என். ராஜபக்ஷ ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டன.

எம்மால் உருவாக்கப்படும் மாணவர்களின் தரம் சார்ந்ததாக அது செல்வாக்குச் செலுத்தும் என்பதால் சிறந்த மாணவர்களைக் கவருவதே எமது முதன்மையான அக்கறையாகும். பட்டதாரி

நிகழ்ச்சிகளுக்காக பதிவு செய்யும் மாணவர்களை தெரிவு செய்தலானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் மத்தியஸ்தமாக செயற்படுத்தப்படுகிறது. அது மாணவர்களின் விருப்பத் தெரிவின் அடிப்படையிலாகும். தற்போது அதிகமான மாணவர்களின் முதல் தெரிவு இயந்திரவியல் அல்லது மருத்துவம் ஆகும். அத்துடன், அதிகமான மாணவர்கள் UCSC பட்ட நிகழ்ச்சிகள் பற்றியும் கணினித் துறையிலுள்ள தொழில் வாய்ப்புக்கள் பற்றியும் அறியாதவர்களாக உள்ளனர். அதற்காக, UCSC ஆனது இருநாள் செயலமர்வுகளை வருகை தர எதிர்பார்த்து அனுமதி பெறவுள்ள புதுமுக மாணவர்களுக்கு நடத்திய போது மாணவர்களின் வருகை சிறப்பாக இருந்ததுடன், தொடர்ந்தும் ஒழுங்குசெய்து நடாத்தவுள்ளது. இதுவரை உள்வாரி நிகழ்ச்சிக்காக பதிவுசெய்யும் வாய்ப்பு அதற்கான ஆர்வம் காட்டுபவர்களுக்கு கிட்டவில்லை.

### பட்டப் பின்படிப்புக்கள்

பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சிகள் முதன்முதலில் 1986 ஆண்டு கொழும்பு வளாகத்தில் பட்டப் பின்படிப்பு திப்ளோமா நிகழ்ச்சியாக வழங்கப்பட்டது. UCSC ஆனது மூன்று (03) முதுமாணிப் பட்டங்களை மீளாய்வாண்டின் போது தொடந்தும் நடாத்தியது. கணினி விஞ்ஞான முதுமாணி பாடநெறியானது கணினி சம்பந்தமான இளமாணிப் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமையினைக் கொண்டவர்களை கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட பாடநெறியென்பதுடன், தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான முதுமாணிப் பட்ட நிகழ்ச்சியானது பட்டதாரிகள் மற்றும் ஏனைய கற்கைதுறைசார் தொழில்பயிலுநர்கள் ஆகியோர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. MIT நிகழ்ச்சியானது ஈ-கற்றல் (e-Learning) மற்றும் பல்லூடக (Multi-Media) பாடப்பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. தகவல் காப்பு விஞ்ஞானத்தில் முதுமாணி (MScIS) நிகழ்ச்சியானது, தகவல் காப்புத் துறையில் பட்டப் பின்படிப்புத் தகைமையைப் பெற விரும்பும் பட்டதாரிகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சியானது, தகவல் தொழில்நுட்பவியல், தகவல் முறைமை கணக்காய்வு மற்றும் தகவல் காப்பு எனும் துறைகளில் வேலை செய்வோருக்கு இடைத் தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது.

UCSC இனால் வழங்கப்படும் முதுமாணி நிகழ்ச்சிகள் இரண்டு வருட பகுதி நேர பாடநெறி என்பதுடன், நான்கு கல்விசார் காலப்பகுதிகளை கொண்டமைந்துள்ளது. 2012/2013 ஆண்டின் மாணவர் குழுக்களுக்கான பாடநெறிகள் 2012 திசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 2013/14 ஆண்டுக்கான மாணவர் அனுமதிகள் சம்பந்தமான தேர்வுப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை என்பன நடாத்தப்படுவதுடன் இவ்வாண்டினுள் தொடக்கிவைக்கப்பட்டது. 2014 ஆண்டு முற்பகுதியில் அதிகரிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையினை நிகழ்ச்சிகளுக்கு சேர்த்துக்கொள்ளல் ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிகழ்ச்சிக்கு மொத்தமாக 30 உள்ளகப் பணியாளர்கள் மற்றும் பல வருகைதரும் விரிவுரையாளர்கள் தமது பங்களிப்பினை வழங்குகின்றனர். 2013 திசம்பர் மாத இறுதியளவில் முதுமாணிப் பட்டதாரி மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 303 ஆகும். முதுமாணி நிகழ்ச்சிகளால்

ஈட்டப்பட்ட வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் UCSC இன் உருவாக்கப்பட்ட நிதிக்கு பங்களிப்பு செய்துள்ளதுடன், அதன் உட்கட்டமைப்பு மற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்கு உதவியளிக்கும் விதமாக மிக முக்கிய பாத்திரத்தினை வகிக்கிறது.

UCSC ஆனது தற்போது மூன்று முதுமாணிப் பட்ட நிகழ்ச்சிகள் மூன்றினை வழங்குவதுடன், ஆய்வுப் பட்ட நிகழ்ச்சிகளுக்காக 353 மாணவர்கள் உள்ளனர். (அட்டணை 4). கணினி விஞ்ஞான முதுமாணிப் பட்ட நிகழ்ச்சியானது 1990ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருவதுடன், இதுவரை அதில் 128 மாணவர்கள் உள்ளனர். தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சியானது 2000ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருவதுடன், அதில் 123 மாணவர்கள் உள்ளனர். தகவல் பாதுகாப்பு நிகழ்ச்சிக்காக உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 52 பேர் ஆகும். IBMBB உடன் நடாத்தப்படும் புதிய உயிரியல் தகவலியல் நிகழ்ச்சிக்காக மாணவர்கள் 13 பேர் உள்ளனர். ஆய்வு மாணவர்கள் 46 பேர் தத்துவமாணி/கலாநிதி (M.Phil/PhD) பட்டத்திற்கான தமது ஆய்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். அதிகளவு எண்ணிக்கையான ஆய்வு மாணவர்கள் இவ்வாண்டில் பட்டங்களைப் பெற்றுக்கொண்டதன் மூலம் ஆய்வுகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள விசேட தாக்கத்தையும் மற்றும் அதேபோல் கவனத்தையும் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது.

2013 ஆண்டில் தத்துவமாணி (M.Phil) பட்ட நிகழ்ச்சிக்கு புதிய மாணவர்கள் (பகுதி நேரம் 5 மற்றும் முழு நேரம் 4 என்பதாக) ஒன்பது பேர் பதிவுசெய்துள்ளனர். அத்துடன், பகுதிநேர மாணவரொருவரும் முழு நேர மாணவர்கள் இருவரும் 2013 ஆண்டினுள் கலாநிதி (PhD) பட்ட நிகழ்ச்சிக்காக பதிவுசெய்துள்ளனர்.

அட்டவணை 4 : பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சிகள்

| பாடநெறி | 2012 இன் அனுமதி | 1 ஆம் வருட மாணவர் | 2 ஆம் வருட மாணவர் | 3 ஆம் வருட மாணவர் | 4 ஆம் வருட மாணவர் | மொத்தம் | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கணினி விஞ்ஞான முதுமாணி | 68 | 68 | 60 | - | - | 128 | 51 |
| தகவல் தொடர்பாடல் முதுமாணி | 66 | 66 | 57 | - | - | 123 | 56 |
| தகவல் காப்பு முதுமாணி | 26 | 26 | 26 | - | - | 52 | 09 |
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி | - | - | - | - | - | - | 01 |
| கணினி விஞ்ஞானத் தில் பட்டப் பின்படிப்பு திப்ளோமா | - | - | - | - | - | - | 02 |
| தகவல் தொழில்நுட் பத்தில் பட்டப் பின்படிப்பு திப்ளோமா | - | - | - | - | - | - | 03 |
| **Taught பட்டப் பின் படிப்பு திப்ளோமா** | **160** | **160** | **143** | **0** | **0** | **303** | **122** |
| MPhil/PhD | 09 | 09 | 08 | 09 | 13 | 39 | 06 |

| மொத்தம் | 169 | 169 | 151 | 09 | 13 | 342 | 128 |
|---|---|---|---|---|---|---|---|

எல்லாப் பாடநெறிகளும் ஆங்கில மொழி மூலமே நடைபெறும்.

விருதுகள்

பட்டப் பின்படிப்பு பட்டமளிப்பு விழா 2013 நவம்பர் 21ஆம் திகதி BMICH இல் நடைபெற்றது. கணினி விஞ்ஞான முதுமாணிப் பட்ட நிகழ்ச்சியில் சிறந்த மாணவருக்கான Kingslaka விருது திரு. எம்.டீ..எஸ். தினுஷ்க என்பவருக்கு வழங்கப்பட்ட அதேவேளை, தகவல் தொழில்நுட்ப முதுமாணிப் பட்டத்தில் சிறந்த மாணவர் JICA விருது (Ms.) ஜீ.ஏ.டீ.பீ.எஸ். செனவிரத்ன எனும் மாணவிக்கு வழங்கப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு விருது (UCSC) – 2012, UCSC இன் பணிப்பாளரான பேராசிரியர் ஜீ.என். விக்ரமநாயக்க அவர்களுக்கு வழங்கப்பட்டது.

வெளிவாரிப் பட்டங்களும் விரிவாக்கல் கற்கைநெறிகளும்

வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 5,722 பேர் இணைந்து கொண்டுள்ள அதேவேளை, 309 பேர் விரிவாக்கல் கற்கைநெறிகளைத் தொடருகின்றனர். இதற்குப் புறம்பாக UCTIT நிகழ்ச்சி மாணவர்கள் 13,814 பேர் பரீட்சைக்கு தோற்றியுமுள்ளனர். FIT நிகழ்ச்சிக்காக மாணவர்கள் 930 பேர் பதிவுசெய்துள்ளதுடன், ஆண்டினுள் 1127 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். ஈ-கற்றல் நிலையமானது சம்பத் வங்கிக்கு இணையவழி (online) (தமிழ்) மொழிச் சேவையை வழங்கியதுடன், விளையாட்டுத்துறை அமைச்சின் பயிற்சியளிப்பு நிலையத்திற்கு கலப்புக் கற்கைச் சூழல் உதவியை வழங்கியது.

தகவல் தொழில்நுட்ப இளமாணி (BIT) பட்ட நிகழ்ச்சி மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மாணவர்கள் 29,179 பேரைக் கவர்ந்துள்ளதுடன், 1,436 பட்டதாரிகளையும், 2,788 உயர் திப்ளோமாதாரிகள் மற்றும் 6,003 திப்ளோமாதாரிகளையும் உருவாக்கியுள்ளது. 2012/13 இல் 2,034 புதியவர்கள் இணைந்து கொண்டதுடன், அதிகூடிய பட்டதாரி வெளியாக்கத்தை உருவாக்கியுள்ளது (அட்டவணை 5). மிகச் சாதாரண கட்டணங்களுக்கு அமைச்சின் NODES நிலையம் ஊடாக கணினி வளங்களை பயன்படுத்தும் சந்தர்ப்பம் இவ்வாண்டிலும் தொடர்ந்து வழங்கப்பட்டது. 2013/14 வருடத்திற்கான சேர்த்துக் கொள்ளல் செயற்பாடுகளும் இவ்வாண்டினுள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இவ்வருடம் முடிவடைவதற்குள் 2000 இற்கும் அதிகமான அனுமதிகள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 5 : வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சிகள் 2012/13

| பாடநெறி | 2012 இன் அனுமதி | 1 ஆம் வருட மாணவர் | 2 ஆம் வருட மாணவர் | 3 ஆம் வருட மாணவர் | மொத்தம் | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| தகவல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா | 2034 | 2816 | 1045 | 314 | 4175 | 611 |
| தகவல் தொழில்நுட்பவியல் உயர் டிப்ளோமா | 714 | 1045 | 501 | 845 | 2391 | 305 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தகவல் தொழில்நுட்பவியல் இளமாணிப் பட்டம் | 312 | 314 | 531 | 571 | 1416 | 194 |
| எல்லாம் | | **2811** | **1545** | **1416** | **5722** | |

கடந்த மூன்று வருடங்களில் இலக்குகளுடன் பதிவுசெய்து கொண்ட மற்றும் பட்டம் பெற்ற எண்ணிக்கையினை இனங்காட்டும் தகவல் தொழில்நுட்பவியல் பட்டதாரி (BIT) மாணவர்களது செயலாற்றலை அட்டவணை 6 தெரிவிக்கின்றது.

பாடநெறி மாற்றத்தைப் பற்றி விளக்கமளிப்பதற்காகவும் நிறுவனப் பின்னூட்டலைப் பெற்றுக்கொள்வதற்காகவும், மே மாதம் 30ஆம் திகதி BIT நிறுவன கூட்டம் நடாத்தப்பட்டது. hSenid இனால் BIT முதலாம் ஆண்டு மாணவர்களின் பயிலுநர்கள் நிகழ்ச்சியினை அறிமுகம் செய்வதற்கான விளக்கமளித்தல் கூட்டமொன்று, மே மாதம் 30 திகதி ஒழுங்கு செய்யப்பட்டது. BIT பரீட்சைகள் கொழும்பு, கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டது.

அட்டவணை 6: கடந்த மூன்று வருட காலத்தினுள் வெளிவாரிப் பட்ட செயலாற்றல்

| வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சிகள் | KPI | 2010/11 | 2011/12 | 2012/13 |
|---|---|---|---|---|
| DIT – புதிய அனுமதிகள் | **2000** | 2514 | 2365 | 2034 |
| DIT – பதிவு செய்தது | 4000 | 4281 | 4287 | 4175 |
| DIT – டிப்ளோமா | **600** | **576** | **654** | **611** |
| HDIT - உயர் டிப்ளோமா அனுமதி | **600** | 549 | 648 | 714 |
| HDIT - உயர் டிப்ளோமா பதிவுசெய்தது | 2000 | 1863 | 2019 | 2391 |
| HDIT - உயர் டிப்ளோமா | **300** | **308** | **262** | **305** |
| BIT – பட்டதாரி அனுமதி | **300** | 228 | 279 | 312 |
| BIT - பட்டதாரி பதிவுசெய்தது | 1200 | 1188 | 1293 | 1416 |
| BIT – பட்டதாரிகள் | **150** | **129** | **172** | **194** |

## பட்டமளிப்பு

2013 ஏப்பிரல் 5 ஆம் திகதி நடைபெற்ற 2012 ஆம் ஆண்டின் பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றியவர்களது செயற்சாதனைகள் அட்டவணை 7 இல் காட்டப்பட்டுள்ளன. இப் பட்டமளிப்பு விழாவில் சாதனைமிகு எண்ணிக்கையான 172 பட்டதாரிகள் பட்டங்களைப் பெற்றனர். மாணவர்களின் கருத்திட்ட பரீட்சைகள் முடிவடைந்து மூன்று மாதங்களின் பின்னர் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு பற்றிய ஆய்வில் 94% ஆனோர் பதிலளித்துள்ளனர். 131 பேர் (81 %) ஏற்கனவே தொழில் புரிவதுடன், 10 பேர் (6 %) சிறந்த தொழிலை தேடிக்கொண்டிருக்கின்றனர். 11 பேர் (7%) அவர்களின் கல்வி நடவடிக்கைளை தொடந்தவண்ணம் இருக்கும் அதேவேளை, ஏனையோர் தொழிலின்மை தொடர்பாக தகவலெதனையும் தெரிவிக்கவில்லை. கடந்த இரு வருடங்களிலும் தொழில்வாய்ப்பு வீதமானது முறையே 87% மற்றும் 86% ஆகக் காணப்பட்டது. எவ்வாறிருப்பினும், அடுத்த மாணவர் குழுவின் பெறுபேறுகள் வெளியானதைத் தொடர்ந்து 194 சாதனைமிகு மாணவர் எண்ணிக்கை BIT பட்டப்படிப்புக்காக தகைமை பெற்றுக்கொண்டனர்.

அட்டவணை 7: 2013 இல் நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்றோர்

| அனுமதி | முதலாவது | உயர் | கீழ் | சித்தி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| BIT | 5 | 2 | 15 | 150 | **172** |

**விருதுகள்**

தகவல் தொழில்நுட்ப இளமாணி (வெளிவாரி) பட்டத்தில் சிறந்த செயலாற்றலுக்கான பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க பதக்கம் Ms. பி.ஏ. ரத்நாயக்க என்பவருக்கு வழங்கப்பட்டதுடன், இவருக்கு சிறந்த தனியாள் கருத்திட்டத்திற்கான விருதும் வழங்கப்பட்டது. திரு. எம்.ஜே.பீ.யூ. சமன்திலக்க நினைவு விருது என ஒரு புதிய விருது அறிமுகப்படுத்தப்பட்டதுடன், இவ் விருது Ms. ரீ.ஏ. பெர்னாந்து என்பவருக்கு வழங்கப்பட்டது. 4 காலாண்டுகளுக்குமான சிறந்த e-Learner விருது Ms. எம். பீ. விமலசூரிய (I & II) மற்றும் திரு. ஆர்.எம்.எஸ்.எஸ். பண்டார (III) ஆகியோருக்கும் வழங்கப்பட்ட அதேவேளை, IV ஆவதற்கானது வழங்கப்படவில்லை.

## கல்வி நிறுவனங்கள்

BIT அபேட்சகர்ளுக்கு அதிகமான பயிற்சி நிறுவனங்கள் நேருக்குநேர் வகுப்புக்கள் மற்றும் கற்றல் உதவிகளை வழங்குகின்றன. இச் செயல்முறைகளில் 200 இற்கும் அதிகமான நிறுவனங்கள் பங்குபற்றுவதுடன், சில கல்வியாண்டுகளில் 50 நிறுவனங்கள் வரை பங்குகொள்ளும். UCSC அந் நிறுவனங்களிடம் அதிகாரங்களை கையளிக்காவிடினும் நிகழ்ச்சியின் வெற்றிக்கான அவர்களது பங்களிப்பினை ஏற்றுக்கொண்டுள்ளது. UCSC ஆனது ஒவ்வொரு பாடநெறியினதும் நிறுவனங்கள் ரீதியான பரீட்சைப் பெறுபேற்றின் பொழிப்பினை ஒவ்வொரு வருடமும் பிரசுரிப்பதனால் அபேட்சகர்களுக்கு வழங்குகின்ற நிறுவனங்களை அடையாளம் கண்டுகொள்ளவும் அவர்களின் கற்கும் முறையை திட்டமிட்டுக்கொள்ளவும் இயலுமாகவுள்ளது. அபேட்சகர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் தாமாகவே VLE மற்றும் வழிகாட்டுதல்/பரிந்துரைக்கப்பட்ட உபகரணங்களின் உதவியுடன் கற்றுக்கொள்ளலை மேற்கொள்கின்றனர். 2012/13 இல் 11 மாவட்டங்களிலிருந்து 36 நிறுவனங்கள் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட அபேட்சகர்களுக்கு பயிற்சியினை வழங்கியுள்ளது. அவற்றினுள் 11 நிறுவனங்கள் மூன்றாண்டு காலமாக இச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. (அட்டவணை 8 இல் * என அடையாளமிடப்பட்டுள்ளது.)

அட்டவணை 8 : தகவல் தொழில்நுட்ப இளமாணி (BIT) பாடநெறியைக் கற்பிக்கும் நிறுவனங்கள்

| மாவட்டம் | நிறுவனம் |
|---|---|
| பண்டாரவளை | (1) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ் |
| மட்டக்களப்பு | (1) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(2) எட்வென்சர் இன்ஸ்ரியுட் ஒப் ஐ ரி |
| கொழும்பு | (1) * எர்த் இன்டர்நெஷனல்<br>(2) *ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ் |

| | |
|---|---|
| | (3) * பவுன்டேஷன் ஒப் ஐ ரி புரொபெஷனல்ஸ்<br>(4) * IDM கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(5) * மெட்ரிக்ஸ் இன்ஸ்ரியுட் ஒப் ஐ ரி<br>(6) * ஒபன்ஆர்க் ஸ்கூல் ஒப் பிசினஸ் அன்ட் டெக்நொலஜி<br>(7) * WideAwake சொலுஷன்ஸ்<br>(8) Aurora கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(9) ஈ-அகடமி கம்ப்யூடர் சென்டர்<br>(10) EASL ஜே லங்கா<br>(11) ஸாப் விஷன் ஐ ரி சென்டர்<br>(12) Technoura கலேஜ் ஒப் எடிவுகேசன் |
| காலி | (1) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(2) IDM கம்ப்யூடர் ஸ்டடீஸ் |
| கம்பஹா | (1) * எர்த் இன்டர்நெஷனல்<br>(2) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ், கம்பஹா<br>(3) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ், நீர்கொழும்பு<br>(4) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ், களனி |
| யாழ்ப்பாணம் | (1) BIT கோனர்<br>(2) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(3) MIS<br>(4) Mobile@Net கம்ப்யூடர் சேர்விசஸ் |
| கண்டி | (1) * ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(2) மெட்ரிக்ஸ் இன்ஸ்ரியுட் ஒப் ஐ ரி<br>(3) நெஷனல் இன்ஸ்ரியுட் ஒப் கோபரேடிவ் டெவலப்மன்ட் |
| கேகாலை | (1) இன்ஸ்ரியுட் ஒப் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(2) Solarize கம்ப்யூடர் ஸ்டடீஸ் |
| குருணாகல் | (1) * ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(2) இன்ஸ்ரியுட் ஒப் பிசினஸ் ஸ்டடீஸ் |
| மாத்தறை | (1) * ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>(2) Dbase ஸ்கூல் ஒப் கம்ப்யூடின்<br>(3) IDM கம்ப்யூடர் ஸ்டடீஸ் |
| இரத்தினபுரி | (2) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ் |

UCSC ஆனது, விரிவாக்கல் சான்றிதழ் கற்கைநெறிகள் எட்டை தொடர்ந்தும் வழங்கிவருகின்ற போதிலும், அக் கற்கைநெறிகளின் கேள்வியில் வீழ்ச்சியினைக் காட்டும் வகையில் கவர்ந்துகொண்ட மாணவர்கள் 300 பேர் மாத்திரமேயாகும். UCSCஇனால் நடாத்தப்படும் கணினி விஞ்ஞான சான்றிதழ் (CSC) பாடநெறிகள் (நிகழ்ச்சிகள்) பற்றிய விபரம் அட்டவணை 9இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 9: கணினி கற்கைகள் நிறுவன (CSC) பயிற்சி பாடநெறிகள்

| பாடநெறி | B | P |
|---|---|---|
| JavaSE மூலமான Java பிரயோக அபிவிருத்தி | 2 | 35 |
| JavaEE மூலமான உயர்தர Java பிரயோக அபிவிருத்தி | 2 | 51 |
| Unix Linux வலையமைப்பு & முறைமை நிர்வாகம் | 2 | 78 |
| உயர்தர பல்லூடக வலைதள வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி நுட்பம் | 2 | 28 |
| PHP மற்றும் MySQL மூலம் Dynamic வலைதள பிரயோக அபிவிருத்தி | 2 | 25 |
| AutoCAD 2010 மூலம் கணினி உதவியுடனான வரைதல் | 1 | 36 |
| Microcontroller செயற்றிட்டம் மூலமான (Robotics உட்பட) உட்பொதிக்கப்பட்ட முறைமை வடிவமைப்பும் அபிவிருத்தியும் | 2 | 20 |
| கணினி உயிரியல் | 1 | 36 |
| மொத்தம் | 14 | 309 |

## வெளிநாட்டு மாணவர்கள்

பிராந்தியத்தில் மிகச் சிறந்த மத்திய நிலையமாக ஏற்றுக்கொள்ளவதற்காக வெளிநாட்டு மாணவர்களைக் கவர்ந்து கொள்வது முக்கியமானதாகும். வெளிநாட்டு மாணவர் பிரிவிலே வேறு எங்கேனும் உயர் தரத்தில் கற்ற மாணவர்களாயினும் உள்ளூருடன் தொடர்புடையவர்களே இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2011 ஆம் ஆண்டிலே வெளிநாட்டு மாணவர் பிரிவில் கணினி விஞ்ஞான பட்ட நிகழ்ச்சிக்காக முதலாவது மாணவர் சேர்த்துக்கொள்ளப்பட்டார். இவ்வாண்டு தகவல் தொழில்நுட்ப முதுமாணிப் பட்ட நிகழ்ச்சிக்காக முதன்முறையாக வெளிநாட்டு மாணவரொருவர் பூட்டானிலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்டார். வெளிநாட்டு மாணவர் அனுமதிகள் பற்றிய தகவல்கள் அட்டவணை 10 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 10 : வெளிநாட்டு மாணவர்கள்

| பாடநெறி | மொழி | அனுமதி | 1 ஆம் வருட மாணவர் | 2 ஆம் வருட மாணவர் | 3 ஆம் வருட மாணவர் | 4 ஆம் வருட மாணவர் | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கணினி விஞ்ஞானம் | ஆங்கிலம் | - | - | 01 | - | - | - |
| MIT | ஆங்கிலம் | 01 | 01 | - | - | - | - |

## புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள்

பாடநெறி மீளமைப்பு மற்றும் பட்ட நிகழ்ச்சிகளில் மாற்றம் காரணமாக BICT நிகழ்ச்சி BIS என மீளப் பெயரிடப்பட்டது. எனினும், இப் பாடநெறியையொத்த பாடநெறியொன்னு இதற்கு முன்னர் செயற்படுத்தப்பட்டதனால், இப் பாடநெறியானது புதிய பாடநெறியாக கருதப்படமுடியாது. ஆனாலும், கணினி விஞ்ஞானம் பற்றிய புதிய விஞ்ஞானமாணி பட்ட மாணவர் குழுவுக்கு 2015 ஆம் ஆண்டில் அவர்களது 3 ஆவது ஆண்டின் போது புதிய மென்பொருள் இயந்திரவியல் பட்டத்தை தெரிவு செய்வதற்கு வாய்ப்பொன்று வழங்கப்படும். பட்டதாரி பட்டம் வரை செல்லக்கூடிய புதிய சான்றிதழ் நிகழ்ச்சியொன்றை ஆரம்பிப்பதற்காகவும் மற்றும் தகவல் தொழில்நுட்பம் பற்றிய

சர்வதேச திறன் நிகழ்ச்சியை (ICIT) நடாத்துவதற்காகவும் FITIS மற்றும் NODES என்பவற்றுடன் UCSC புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ளது.

அட்டவணை 11 : புதிய கற்கைநெறிகள்

| பாடநெறி | மொழி | சான்றிதழ் | திப்ளோமா | பட்டப் பின்படிப்பு திப்ளோமா | முதுமாணி | தத்துவமாணி | கலாநிதி |
|---|---|---|---|---|---|---|---|
| மென்பொருள் பொறியியல் | ஆங்கிலம் | - | - | - | - | - | - |
| ICIT | ஆங்கிலம் | - | - | - | - | - | - |

## ஆய்வு

### ஆய்வு, புத்தாக்கங்கள் மற்றும் பிரசுரங்கள்

பல ஆய்வுக் குழுக்களின் ஊடாக ஆய்வு மாணவர்கள் மூலமாக ஆய்வானது மேற்கொள்ளப் படுகின்றது (அட்டவணை 13). UCSC ஆனது, பிரதானமாக ஆய்வுக் கருத்திட்டங்களை மையப்படுத்திச் செயற்படுத்தப்படும் அதன் முழு/பகுதி நேர (FT/PT) தத்துவமாணிக் கற்கைகளுக்காக கணினி விஞ்ஞானம்/பொறியியல் ஆகியனவற்றில் சிறந்த முதனிலைப் பட்டப் பெறுபேறுகளைக் கொண்ட மாணவர்களை சேர்த்துக்கொள்கின்றது. மீளாய்வு ஆண்டின் போது 13 புதிய மாணவர்கள் பதிவுசெய்து கொண்டதுடன், ஒரு மதிப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டது. தற்போது UCSC இன் 16 சிரேஷ்ட கல்வியியலாளர்கள் மற்றும் 10 வெளிவாரி ஆய்வாளர்கள் ஆகியோரின் கீழ் 52 மாணவர்கள் 22 பல்துறைக்கற்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். தத்துவமாணி/கலாநிதி (MPhil/PhD) பட்டக் கற்கைகளில் ஈடுபட்டுள்ள ஆய்வுக் கருத்திட்டங்கள் 14 இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மீளாய்வாண்டின் போது தத்துவமாணி/கலாநிதி (MPhil/PhD) மாணவர்கள் 13 பேர் பிரசுரங்களை மேற்கொண்டிருந்தனர்.

சமூக வாழ்க்கை வலையமைப்பு ஆய்வுக் கருத்திட்டத்திற்காக 3 வாரங்களைச் செலவிடுவதற்கு ஒக்ரோ/நவம். மாதங்களினுள் வெஸ்டர்ன் சிட்சி பல்கலைக்கழகப் பேராசிரியர் கினிகே அவர்கள் UCSC இற்கு வருகைதந்தார். அக் கருத்திட்டத்திற்காக அவர் 2013 சனவரியிலும் UCSC இற்கு வருகைதந்தார்.

அட்டவணை 12: பணியாளர் ஆய்வுத் துறைகள்

| ஆய்வுத் துறைகள் | FT | PT | மொத்தம் | புதிய | பூர்த்தியானது |
|---|---|---|---|---|---|
| செயற்கை நுண்ணறிவு | 0 | 1 | **1** | 2 | 0 |
| உயிரியல் தகவலியல் | 0 | 0 | **0** | 0 | 1 |
| கணினி கிரபிக்ஸ் | 4 | 2 | **6** | 1 | 1 |
| தரவு தேடல் | 1 | 0 | **1** | 0 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டிஜிடல் வழக்குச் செயற்பாடு | 1 | 0 | **1** | 0 | 0 |
| ஈ-வியாபாரம் | 0 | 1 | **1** | 0 | 0 |
| ஈ-சுகாதாரம் | 0 | 1 | **1** | 0 | 0 |
| ஈ-கற்றல் | 3 | 2 | **5** | 2 | 3 |
| விளையாட்டு அடிப்படையில் கற்றல் | 0 | 1 | **1** | 0 | 0 |
| புவியியல் தகவல்முறைமை | 1 | 1 | **2** | 0 | 1 |
| பசுமை தகவல் தொழில்நுட்பம் | 1 | 0 | **1** | 0 | 0 |
| உயர் முன்னேற்றம் | 0 | 0 | **0** | 0 | 1 |
| அனுகூலமான ஆய்வுதவி | 0 | 1 | **1** | 0 | 0 |
| மனித-கணினி பரஸ்பர செயற்பாடு | 1 | 0 | **1** | 0 | 0 |
| பிரதிபிம்பச் செய்முறை | 1 | 2 | **3** | 1 | 2 |
| தகவல் முறைமை | 1 | 0 | **1** | 1 | 0 |
| நுண்ணறிவு முறைமைகள் | 0 | 1 | **1** | 0 | 0 |
| அறிவுசார் பொறியியல் | 1 | 0 | **1** | 1 | 0 |
| பொறிசார் கற்றல் | 1 | 2 | **3** | 0 | 2 |
| இயற்கை மொழி செய்முறை | 2 | 1 | **3** | 0 | 2 |
| புலன் வலையமைப்பு | 1 | 3 | **4** | 0 | 0 |
| மென்பொருள் இயந்திரவியல் | 0 | 1 | **1** | 1 | 1 |
| **மொத்தம்** | **19** | **20** | **39** | **9** | **14** |

UCSC ஆனது, ஆய்வினை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தும் செயற்பாட்டு வழிகாட்டியுடன் ஆய்வு நிதியமொன்றினை 2009 இல் உருவாக்கியது. ஆரம்ப பங்களிப்பு 4 மில்லியன்களில் இருந்து முதுமாணி மற்றும் தகவல் தொழில்நுட்ப (BIT) பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளால் உருவாக்கப்பட்ட நிதி மூலமாக தொடர்ந்து வளர்ச்சியடைந்துள்ளதுடன், இது தற்போது 43 மில்லியன்களாக காணப்படுகிறது. சிரேஷ்ட பணியாளர்கள் ஆய்வுக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கும், சர்வதேச மாநாடுகள் மற்றும் சஞ்சிகைகளில் ஆய்வுகளை பிரசுரிப்பதற்கும் ஆண்டுதோறும் ரூபா. 350,000 வரை பயன்படுத்த முடியும். இது UCSC இன் வருடாந்த பிரசுரங்களை 30 இலிருந்த 60 வரை அதிகரிக்கச்செய்தது. இக்காலப்பகுதியில் 18 நாடுகளில் நடைபெற்ற 59 மாநாடுகளில் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. 25 (71 %) கல்விசார் பணியாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டனர். அட்டவணை 13 பிரசுரங்களின் விபரங்களை வழங்குகின்றது.

அட்டவணை 13: ஆய்வு பற்றிய சுருக்கம்

| விடயம் | பிரசுரிக்கப்பட்டவை | வணிகமயமானவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| ஆய்வுகளின் எண்ணிக்கை | 114 | - | 59 |
| புத்தாக்கங்களின் எண்ணிக்கை | - | - | - |
| சஞ்சிகைகளின் எண்ணிக்கை | 8 | - | - |
| புத்தகங்களின் எண்ணிக்கை | - | - | - |

| | | | |
|---|---|---|---|
| ஆக்கங்களின் எண்ணிக்கை | 59 | - | - |
| ஏனையவை | - | - | - |
| மொத்தம் | **67** | - | **59** |

## மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

பொருத்தமான ஆய்வுகளை இனங்காணவும் செயற்படுத்தவும் பொறிமுறைகளை வடிவமைப்பது UCSC இன் இன்னொரு தந்திரோபாயமாகும். ஆண்டிறுதியளவில் கல்வியாண்டு நிறைவுசெய்யப்படாத காரணத்தினால் இறுதியாண்டு மாணவர்களுக்கான UCSC இன் வருடாந்த ஆய்வுக் கருத்தரங்கு ஏற்பாடுகள் அடுத்த வருடம் வரை ஒத்திவைக்கவேண்டியேற்பட்டது. எனினும், பணியாளர் கருத்தரங்கு 2013 சனவரி மாதம் 29ஆம் திகதி ஒழுங்குசெய்யப்பட்டது. UCSC தனது ICTer பருவகால இதழ்கள் இரண்டினை வெளியீடு செய்தது. வளர்ந்து வரும் பிராந்தியத்துக்கான சர்வதேச தகவல் தொழில்நுட்ப மாநாடு 2013 திசம்பர் மாதம் 11 முதல் 14 வரை மிக வெற்றிகரமாக நடாத்தப்பட்டதுடன், முற்பட்ட மற்றும் பிற்பட்ட மாநாட்டுச் செயலமர்வுகளும் அதில் உள்ளடங்கியிருந்தன. அத்துடன், ஆய்வுக்காக சகல கல்வியாளர்களினதும் ஈடுபாட்டினை தொடர்ந்தும் ஊக்கப்படுத்தும் வகையில் UCSC இன் ஆய்வு நிதியத்தை பயன்படுத்துதல் தொடர்பான பொறிமுறையானது திருத்தியமைக்கப்பட்டது. மேலும், 2013 திசம்பர் மாதம் 1ஆம் திகதி நடைபெற்ற IEEE Student, GOLD, WIE congress என்பவற்றை UCSC ஏற்பாடு செய்து நடாத்தியது.

பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க வருடாந்த சொற்பொழிவு 2013 யூன் மாதம் 10 ஆம் திகதி மிக வெற்றிகரமாக UCSC இல் நடாத்தப்பட்டது. ஓய்வுபெற்ற உயிர் இரசாயனவியல் பற்றிய பேராசிரியரும் தேசிய ஆய்வுக் கவுன்சிலின் தலைவருமான வித்தியாஜோதி பேராசிரியர் எரிக் கருணாநாயக்க அவர்கள், "கல்விசார் வாழ்வின் தடைகளும் வெற்றிகளும்" எனும் தலைப்பில் சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார். பேராசிரியர் அபய இந்துருவ அவர்கள், பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க அறக்கட்டளை நிதியத்தின் கீழ் முதலாவது அறக்கட்டளை தலைவராக நியமனம் செய்யப்பட்டார். அவர், 2014 யூலையில் அவரது முதலாவது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார். மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் பற்றிய விபரம் அட்டவணை 14 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 14 : மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

| விடயம் | பங்குபற்றியது | பிரசுரிக்கப் பட்டது | சமர்ப்பிக்கப் பட்டது |
|---|---|---|---|
| சிரேஷ்ட கல்வியாளர்களின் உள்நாட்டுக் கருத்தரங்குகள் | 20 | 3 | 0 |
| சிரேஷ்ட கல்வியாளர்களின் சர்வதேசக் கருத்தரங்குகள் | 19 | 55 | 20 |
| ஒழுங்கமைக்கப்பட்ட சர்வதேசச் செயலமர்வுகள் (ICTer) | 222 | 55 | 48 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICTer) சஞ்சிகை | 5 | 5 | - |

| மொத்தம் | 266 | 118 | 68 |
|---|---|---|---|

கிடைத்த விருதுகள்

UCSC இனால் தேசிய மற்றும் சர்தேச போட்டிகளில் பங்குபற்றுவதற்காக அதன் மாணவர்களுக்கு தொடர்ந்தும் ஊக்கமளித்தது. வெற்றியினைப் பெற்றுக்கொண்ட மாணவர் விபரம் மாணவர்களின் அடைவுகள் என்பதன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது. அதேபோல், UCSC இனால் பணியாளர்களின் ஆய்வு உற்பத்திகளை தேசிய மற்றும் சர்தேச மட்டத்தில் போட்டியிட ஊக்கமளிப்புச் செய்யவும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவின் கீழ் வெற்றியினைப் பெற்றுக்கொண்ட SIYARA – துறைமுகம் VTMS (துறைமுக நெரிசல் முகாமை பற்றிய புதிய பரிமாணம்) தேசிய சிறந்த தகைமை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விருது விழாவில் (NBQSA) வணிகப் பிரிவில் பங்குபற்றிய தகவல் தொழில்நுட்ப உற்பத்திகள் 46 ஐ தோல்வியடையச் செய்து, அனைத்துக்குமான தங்கப் பதக்கத்தை வென்றெடுத்தது. பேராசிரியர் கொடிகார அவர்களால் வழிநடாத்தப்பட்ட அதேகாலப்பகுதியிலான ஆய்வுக் குழுவினால் இவ் உற்பத்தி அபிவிருத்தி செய்யப்பட்டது. சிங்களப் பாடல்களுக்கான உள்ளடக்க அடிப்படையிலான ஆடியோ இசை கண்காணிப்பு அணுகுமுறை எனும் மற்றுமொரு பணியாளர் கருத்திட்டமானது அதே நிகழ்வில் ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவின் கீழ் சிறப்பு விருதினை வென்றது. அத்துடன், பணியாளர்களில் சிலர் தமது ஆய்வுகளை மேற்கொள்வதற்காக மானியங்களைப் பெற்றுக்கொண்டனர். கிடைத்த விருதுகள் பற்றிய தகவல்கள் அட்டவணை 15 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 15 : கிடைத்த விருதுகள்

| விடயம் | விருதுகளின் எண்ணிக்கை | கல்விமான்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உள்நாட்டு விருதுகள் | 1 | 1 | - |
| தேசிய விருதுகள் | 20 | 9 | 53 |
| சர்வதேச விருதுகள் | 1 | 1 | - |
| ஏனையவை | - | - | - |
| மொத்தம் | 22 | 11 | 53 |

## கல்விசார் பணியாட்டொகுதியினர்

மூன்று கல்வியாளர்கள் ஓய்வு கால விடுமுறையில் சென்றுள்ளனர். விரிவுரையாளர்கள் (தகுதிகாண்) மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இவ்வாண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட போதிலும், அவர்களின் நியமனங்கள் தொடர்பான அங்கீகாரமானது இதுவரை பூர்த்தி செய்யப்படாமலே

உள்ளது. எனினும், வெற்றிடமேற்பட்டுள்ள பதவிகளுக்கு தேவையான ஆட்களை கவர்ந்து இணைத்துக்கொள்வதில் UCSC ஆனது வெற்றிபெறவில்லை. கல்விசார் மற்றும் கல்விசார் துணைப் பதவிகள் 82 இல் 36 ஐ மாத்திரமே கொண்டுள்ளது. தனியார் துறையில் மிகச் சிறப்பான எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்றமையினால் தொழில்நுட்பப் பயிற்சிபெற்றோரை தக்கவைத்துக்கொள்வதும், சிறந்த இளவயது கல்வியாளரை கவர்ந்திழுப்பதும் மிகக் கடினமான காரியமாகவுள்ளது. நிரந்தர பணியாட்டொகுதியினர் நாளாந்த செயற்பாடுகளை நிறைவேற்றிச் செல்லும் அதேவேளை, UCSC ஆனது தனது சில நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்காக வெளியிலிருந்து வருகைதரும் ஆளணியின் மீது நம்பிக்கைவைத்து செயலாற்றுகின்றது.

சர்வதேச ரீதியில் மனித வளங்களை கவர்ந்திழுக்கும் வகையில் அவுஸ்திரேலியா, சுவீடன், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து வருகைதரும் ஆராய்ச்சியாளர்களை குறுங்கால ரீதியில் இவ்வாண்டினுள் வரவழைத்தது. அத்துடன், UCSC தொடர்ந்தும் பணியாளர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தும் வகையில் சுவீடனின் Umea பல்கலைக்கழகத்தின் Linnaeus Palme கருத்திட்டத்தின் கீழ் UCSC இன் பணியாட்டொகுதி அங்கத்தவரொருவர் வெற்றிகரமாக Umea பல்கலைக்கழகத்தில் பாடநெறியினை நடாத்தினார்.

UCSC இன் கல்விசார் பணியாளர்கள் பற்றிய விபரங்கள் அட்டவணை 16 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 16 : பணியாளர் ஆராய்ச்சிப் பகுதிகள்

| மொழிமூலம் | மொழி மூலம் | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரையாளர் | விரிவுரையாளர் | உதவி விரிவுரையாளர் | போதனாசிரியர் |
|---|---|---|---|---|---|---|---|
| கணினி (P) | ஆங்கிலம் | - | 02 | 19 | 13 | - | 02 |
| கணினி (C) | ஆங்கிலம் | - | - | - | - | 07 | 08 |

*04 விடுமுறையில் உள்ளனர்

## கல்விசாராத ஆளணியினர்: நிரந்தரம் (P) ஒப்பந்தம் / ஒப்படைப்பு (C/A)

முகாமைத்துவ மற்றும் தந்திரோபாய தகவல் முறைமையினை அபிவிருத்தி செய்வதற்கும் அமுல்படுத்துவதற்குமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எதிர்பார்க்கப்பட்ட பாவணையார்களின் குறைந்த ஈடுபாடு காரணமாகப் பெறுபேறு உற்சாகமளிப்பதாக இல்லை. நிகழ்ச்சித்திட்ட மற்றும் முறைமை பகுப்பாய்வாளர் பதவி வெற்றிடமானதால், செயற்படுத்தப்பட்ட பரீட்சை செயலாக்க முறைமை நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் செயற்பாடானது நிறுத்தப்பட்டது. வெளிவாரி மற்றும் நீடிப்பு நிகழ்ச்சிகள் மற்றும் பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சிகளுக்கான கட்டணங்களை இணையதளம் (online) மூலம் செலுத்துவதற்கான வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. UCSC இன் நிதியியல் முறைமை மேம்படுத்தப்பட்டதுடன், கவனமாக கண்காணிக்கும் மற்றும் bar குறியீடு (barcode) முறை அடிப்படையிலான கண்காணிப்பை உறுதிப்படுத்தும் கருத்திட்டத்தை அமுல்படுத்துதலும் ஆரம்பிக்கப்பட்டது.

UCSCஇன் கல்விசாராத பணியாளர் பற்றிய விபரங்கள் அட்டவணை 17 இல் தரப்பட்டுள்ளன. UCSC இன் கல்விசாராத பணியாளர்கள் 78 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும், நிரந்தர நியமனங்கள் 40 மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பெரும்பாலான செயற்பாடுகள் ஒப்பந்த மற்றும் ஒப்படைப்பு பணியாளர்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், இவ்வாண்டில் பொது நிருவாக பதவி எண்ணிக்கையில் 3 பதவிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 17 : கல்விசாராத பணியாளர்கள்

| வகை | மிக சிரேஷ்ட (நிர்வாக) | சிரேஷ்ட பணியாளர் | கனிஷ்ட பணியாளர் | சிற்றூழியர்கள் | கருத்திட்ட பணியாளர் |
|---|---|---|---|---|---|
| நிரந்தரம் P | 7 | 2 | 24 | 7 | - |
| ஒப்பந்தம் C | 1 | 3 | 13 | 12 | 20 |
| ஒப்படை A | - | 2 | 6 | 4 | 11 |

## பணியாட்டொகுதி பயிற்சியளித்தல் மற்றும் வெளிநாட்டு விடுமுறை

பயிற்சியளித்தல் விடுமுறை: கல்விசார் பணியாளர்கள் இரண்டு பேர் வெளிநாட்டில் நடாத்தப்பட்ட பயிற்சியளித்தல் நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர்.

திரு. பி.எம்.ஏ.வீ. மாபா (இந்தியா), திரு. எஸ்.சீ.எம்.பி. அத்தநாயக்க (வங்காளதேசம்)

கல்விசார் பணியாளர்கள் பதினைந்து பேர் 22 பயணங்கள் கொண்ட வெளிநாட்டு மாநாடுகளில் பங்கு பற்றினர்.

திரு. எம்.ஜீ.என்.ஏ.எஸ். பர்னாந்து (தாய்லாந்து – இருதடவை மற்றும் இந்தோனேசியா), கலாநிதி ஜீ.டீ.எஸ்.பீ. விமலரத்ன (தாய்லாந்து), கலாநிதி கே.பீ. ஹேவகமகே (போர்த்துக்கல், பாசிலோனா மற்றும் சுவீடன்), கலாநிதி கே.எல். ஜயரத்ன (சிங்கப்பூர்), கலாநிதி எச்.ஏ. கல்தேரா (தென் கொரியா), பேராசிரியர் ஜீ.என். விக்கிரமநாயக்க (ஐஸ்லாந்து மற்றும் ஹொங்கொங்), கலாநிதி ஏ.ஆர். வீரசிங்ஹ (போர்த்துக்கல், சுவீடன்), கலாநிதி (திருமதி) எம்.டீ.ஜே.எஸ். குணதிலக்க (வியட்நாம் மற்றும் இந்தியா), கலாநிதி (திருமதி) ஏ.ரீ. தர்மரத்ன (இந்தோனேசியா), பேராசிரியர் என்.டீ. கொடிகார (சிங்கப்பூர்), கலாநிதி ரீ.என்.கே. த சொய்சா (இந்தியா), திருமதி எம்.டீ.என்.ஆர். தயாரத்ன (இத்தாலி), Ms. ரீ.ஏ. வீரசிங்ஹ (சீனா), கலாநிதி டீ.என். ரணசிங்ஹ (இந்தியா) மற்றும் கலாநிதி டீ.ஏ.எஸ். அத்துகோரல (சிங்கப்பூர்).

கல்வியாளர்கள் மூவர் ஓய்வுகால விடுமுறையில் சென்றனர்.

கலாநிதி சீ.ஐ. கெப்பிடியாகம (சுவீடன்), கலாநிதி எம்.சீ. ஜயவர்தன (அவுஸ்திரேலியா) மற்றும் கலாநிதி எச்.எல். பிரேமரத்ன (அவுஸ்திரேலியா).

கல்வியாளர்கள் இருவர் கற்கை விடுமுறையைப் பெற்றுக்கொண்டதுடன், அவர்களில் ஒருவர் பின்னர் கடமையில் இணைந்துகொண்டார். கல்வியாளர்கள் நான்கு பேர் தொடர்ந்தும் கற்கை விடுமுறையில் உள்ளனர்.

கடமையேற்றோர்: திரு. எச்.ஈ.எம்.எச்.பி. ஏக்கநாயக்க (சுவீடன்) 02/05 திகதியும், Ms. ரீ.ஏ. வீரசிங்ஹ (சுவீடன்) 08/08 திகதியும்.

விடுமுறையிலிருப்போர்: திரு. எச்.எம். சிறிவர்தன (ஜப்பான்), Ms. எல்.என்.சி. த சில்வா (இலங்கை), Ms.எப்.எச்.ஏ.எம். பிரேமசந்திர (அவுஸ்திரேலியா), திரு. எம்.ஐ.ஈ. விக்கிரமசிங்ஹ (மலேசியா)

ஏனையன: பணியாளர்களில் 57 பேர் தாய்லாந்துக்கு மேற்கொண்ட நலன்புரி விநோத சுற்றுலாவில் பங்குகொண்டனர். பணியாளர் அங்கத்தவர்கள் நான்கு பேர் தனிப்பட்ட ரீதியில் 6 சுற்றுப்பயணங்களை மேற்கொண்டனர்.

திரு. எஸ்.எஸ்.பீ. மாதர ஆரச்சி (மலேசியா), திரு. கே.எஸ். குணதிலக்க (தாய்லாந்து – இருதடவை மற்றும் இந்தியா), திரு. எம்.டீ.ஆர்.என். தயாரத்ன (சுவீடன்), Dr. கே.எல். ஜயரத்ன (அவுஸ்திரேலியா)

**பணியாளர் நலன்கள்**

**காப்புறுதித் திட்டம்**

UCSC இனது ஊழியர்களின் நன்மை கருதி காப்புறுதித் திட்டமொன்று 2013 ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. பல்வேறு வசதிகளை வழங்குகின்ற இக் காப்புறுதித் திட்டமானது யூனியன் அசூரன்ஸ் கம்பனியுடன் இணைந்து செயற்படுத்தப்படுவதுடன், சுமார் 51 ஊழியர்கள் இக் காப்புறுதித் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளனர்.

**வருடாந்த விநோத சுற்றுலா**

UCSC இன் நலன்புரிச் சங்கத்தினால் 2013 ஆண்டில் பணியாளர்களுக்கு தாய்லாந்துக்குச் செல்வதற்கான வெளிநாட்டுச் சுற்றுலா அல்லது கிரிதலேவுக்குச் செல்வதற்கான உள்நாட்டு சுற்றுலா வாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும், UCSC இன் நலன்புரிச் சங்கத்தினால் விளையாட்டு தினத்துடன் இணைந்த வகையில் ஆண்டிறுதி ஒன்றுகூடலும் திசம்பர் மாதம் 22ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டது.

2013 பெப்பிரவரி 15 இல் நடைபெற்ற 2012 ஆண்டுக்கான அகில இலங்கை பல்கலைக்கழக பணியாளர்களுக்கு இடையிலான டெபல் டெனிஸ் சம்பியன்சிப் போட்டியில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் கலாநிதி எச்.ஏ. கல்தேரா வெற்றியீட்டினார்.

## நிதிச் செலவுகள்

### மீண்டெழும் செலவுகள்

திறைசேரி நிதி பட்டதாரி நிகழ்ச்சி செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு போதாமையினால், UCSC ஆனது உழைத்த வருமானத்தையும் அன்றாட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தியது. ஒரு பட்டதாரி

மாணவனுக்கான செலவு ரூ. 152,000 ஆகும். UCSC அதன் பட்டதாரி மாணவ மீண்டெழும் செலவினத்தில் 32% ஆன 43 மில்லியன்களை உள்வாரிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சிக்காக பங்களிப்புச் செய்தது. ஆளுக்குரிய வேதனாதிகளின் அதிகரிப்பினைத் தவிர்த்து அரசாங்கத்தின் ஒதுக்கீடுகள் கடந்த ஆண்டையும் விட குறைவடைந்து காணப்பட்டது. மீண்டெழும் செலவுகளின் விபரங்கள் அட்டவணை 18 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 18 : மீண்டெழும் செலவு ரூபா 000'

| விடயம் | 2012 | 2013 |
|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 92,840 | 108,057 |
| பிரயாணச் செலவுகள் | 528 | 1,560 |
| வழங்கல்கள் | 4,579 | 6,087 |
| பராமரிப்புகள் | 3,057 | 3,445 |
| ஒப்பந்த சேவைகள் | 29,701 | 35,165 |
| ஏனையன | 57,357 | 67,574 |
| மொத்தம் | **188,062** | **221,888** |
| அரசாங்க ஒதுக்கீடு | 91,802 | 90,383 |

## மூலதனச் செலவுகள்

UCSC அதன் கணினி வசதிகளை மேம்படுத்துவதற்காக பௌதிக வளங்களில் முதலீடு செய்துள்ளது. கணினி ஆய்வுகூடங்கள் சில நவீன உபகரணங்கள் கொண்டவையாக அதன் பிரதான உபகரணங்கள் மாற்றீடு செய்யப்பட்டன. கெம்பியொ (Cambio) நிறுவனத்தினால் ரூ. 5 மில்லியன் பெறுமதியான கணினி ஆய்வுகூடமொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. UCSC இனால் தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களை பேணிச்செல்வதற்காக bar குறியீடு (barcode) முறையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. வலையமைப்பு தொழிற்பாட்டு நிலைய உபகரணங்களின் பாகங்களானது பொருத்தமான உயர் தரமுடையதாக மேம்படுத்தப்பட்டது. மூலதனச் செலவுகளின் விபரங்கள் அட்டவணை 19 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 19 : மூலதனச் செலவுகள் ரூபா 000'

| விடயம் | 2012 | 2013 |
|---|---|---|
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் கைகொள்ளல் | 14,604 | 13,954 |
| இயந்திரங்களை கைகொள்ளல் | - | - |
| கட்டடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்களை கைகொள்ளல் | 22,327 | 43,412 |
| ஏனையன | 4,076 | 17,449 |
| மொத்தம் | **41,007** | **74,815** |
| அரசாங்க ஒதுக்கீடு | 19,150 | 25,759 |

கருத்திட்டங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை)

UCSC ஆனது பல துறைகளிலும் பலம் வாய்ந்த ஆய்வுக் குழுவொன்றை கொண்டுள்ளது. அவற்றில் வடிமைத்தலும் மாதிரியும், ஈ-லேனிங் (e-learning) மற்றும் மொழித் தொழில்நுட்பவியல் போன்றவை பாவணையாளர் சமூகத்தை அடைந்தவையாகும். UCSC ஆனது சக்திவாய்ந்த தொழிற்றுறை - பல்கலைக்கழக ஒத்துழைப்பினைக் கொண்டுள்ள அதேவேளை, ஒன்றிணைந்து இயங்கும் பல்துறை ஆய்வுக் கலாசாரத்தையும் கட்டியெழுப்பியுள்ளது.

ஆய்வு அடிப்படையிலான கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக UCSC ஆனது பொது மற்றும் தனியார் துறையினருக்கு ஆலோசனை சேவைகளையும் நடாத்துகின்றது. UCSC ஆனது கடந்தகால அதன் சில செயற்பாடுகள் மூலம் பிரசித்திபெற்றுள்ளது. 1981 ஆண்டிலிருந்து தேசிய ரீதியிலான தேர்தல்களில் UCSC ஆனது உதவி வழங்கிவருகின்றது. UCSC இன் மென்பொருள் மூலம் தற்போது பிறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்கள் கருமபீடத்தின் மூலமாக அதேயிடத்தில் வழங்கப்படுகிறது. UCSC இன் முயற்சியின் ஊடாக சிங்கள யுனிகோட் (Unicode) வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தியின் பெறுபேறாக நவீன கணினிகளில் சிங்கள மொழிப் பயன்பாட்டுக்கு உதவுகின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக மாணவர் தெரிவு மற்றும் ஒதுக்கீட்டு முறைமை அமுலாக்கமானது UCSC இனால் மேற்கொள்ளப்பட்ட மிகப் பிரதான அபிவிருத்தி நடவடிக்கையொன்றாகும். இது பல்கலைக்கழக அனுமதிக்காக செலவிடப்பட்ட காலநேரத்தைக் கனிசமானளவு குறைவடையச் செய்ததுடன், பின்பற்றப்பட்ட செயல்முறைகள் சரியென்பதையும் உறுதிப்படுத்தியது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்கள் பலவற்றுக்கான ஈ-சோதனையினை அடிப்படையாகக் கொண்ட ஆட்சேர்ப்புச் பரீட்சை ஈ-கற்றல் நிலையத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன. நீதிமன்ற வழக்குகளில் உதவுவதற்காக டிஜிடல் சட்ட நடவடிக்கைக்கான தடயவியல் (Digital Forensic) செயற்பாடுகளை UCSC ஆனது தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.

ஆர்வம் காட்டுகின்ற பிரதான பங்குதாரர்களுடன் உபாயவழி தொடர்புகளை பேணுகின்ற அதேவேளை, நாட்டில் ஈ-அரசாங்க கருத்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் HETC என்பவற்றுடன் புதிய கருத்திட்டங்களை ஆரம்பித்தல் என்பன தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. தீக்ஷ்ன என்பது, கம்பனி, பூச்சிய மீதியுடன் ஆரம்பிக்கப்பட்டது தற்போது சுமார் ரூ. 9 மில்லியன்களை ஒதுக்கமாகக் கொண்டுள்ள UCSC இற்குச் சொந்தமான கம்பனியாகும். UCSC இனால் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் அவற்றுக்கான செலவு விபரங்கள் அட்டவணை 20 மற்றும் அட்டவணை 21 இல் தரப்பட்டுள்ளன.

**தீக்ஷ்ன**

புதிய வெளிநாட்டு நிதி மூலமான கருத்திட்டங்களிலிருந்து பெற்ற வருமானம் வீழ்ச்சியுற்ற போதிலும், தீக்ஷ்ன நிகழ்ச்சிக்கான உள்நாட்டு சமூகங்களின் ஆர்வம் குறிப்பிடத்தக்க அளவில்

வளர்ச்சியைக் காட்டியது. கடந்த ஆண்டில் அங்கத்துவத்திலும் தீக்ஷ்ன கருத்திட்டங்களுக்கான அவர்களின் ஈடுபாட்டிலும் பாரிய வளர்ச்சியினைக் காணக்கூடியதாக இருந்தபோதிலும், நிதியாண்டின் முதல் பகுதியில் இரு மாதங்கள் நடைபெற்ற பல்கலைக்கழக கல்விசார் பணியாளர்களின் பணிப்பகிஷ்கரிப்பின் விளைவாக வியாபார வாய்ப்புக்கள் இழக்கவேண்டிய நிலையேற்பட்டது. கல்வியாண்டு கலண்டர் மாற்றம் மற்றும் மேலதிக மாணவர்களை உள்வாங்கல் என்பவற்றினால் கல்விச் செயற்பாடுகளின் சீரான நிலைமை பாதிப்படைந்ததால் எமது மனித வளத்தை வழங்குவதற்கான ஆற்றல் கட்டுப்படுத்தப்பட்டது. இதற்குப் புறம்பாக, தீக்ஷ்ன கருத்திட்டங்களின் சில வெற்றிகரமான கருத்திட்டங்கள் ஏனைய நிறுவனங்களால் எடுத்துக் கொள்ளலும் நிகழ்ந்தன. தீக்ஷ்ன கருத்திட்டங்களின் கீழ் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி அபேட்சகர்ளின் தகவல் தொழில்நுட்ப (IT) திறன் மதிப்பீட்டுப் பணிகள் சேவை பெறுநர்களினால் கொழும்பு பல்கலைக்கழக கணினி கற்கைகள் நிறுவகத்தின் (UCSC) தனி நபர்களுக்கு வழங்கப்பட்டன. பட்டயக் கணக்காளர்களின் பரீட்சை தன்னியக்க செயன்முறைக்கான தீக்ஷ்னவின் தீர்வும் கூட தற்போது UCSC இன் ஈ-லேனிங் (e-learning) நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகிறது.

எனினும், தீக்ஷ்ன கருத்திட்டங்கள் பற்றி அறிக்கையிடுவதற்காக வெற்றிகரமான நிகழ்வுகள் சில உள்ளன. இலங்கை பொலிஸ் சேவையில் தன்னியக்க விரல் அடையாளத்தை இனங்காணும் முறைமையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், புதிய கருத்திட்டங்கள் பல ICTA வினால் வழங்கப்பட்டமையானது தீக்ஷ்ன கருத்திட்டச் சேவைகளின் தரம் மற்றும் நம்பகத்தன்மைக்கு எடுத்துக்காட்டாகும். அவற்றில் உள்நாட்டு மொழிகள் சார்ந்த பல கருத்திட்டங்கள் புதிய ICTA கருத்திட்டங்களில் உள்ளடங்குகின்றன. அதேபோல், ஆண்டினுள் தீக்ஷ்ன ஊடாக தேசிய ஆராய்ச்சி கவுன்சில் மூலம் வழங்கப்படும் ஆராய்ச்சி மானியங்கள் பல பெற்றுக்கொடுக்கப்பட்டன. நாடு முழுவதுமுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் நிறுவப்பட்டுள்ள பிறப்பு, விவாக மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் முறைமை தீக்ஷ்ன ஊடாக மிக வெற்றிகரமாக நடாத்திச்செல்லப்படுகிறது. பூட்டானின் றோயல் பல்கலைக்கழகத்திற்கான ஈ-கற்றல் (e-learning) தீர்வு வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டதன் விளைவாக அவர்களின் பணியாளர்களுக்காக குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று பூட்டானில் நடாத்தப்பட்டது.

### கண்காட்சிகள்

நவம்பர் 13 முதல் 17 வரை கொழும்பில் நடைபெற்ற CHOGM வர்த்தகக் கண்காட்சியில் UCSC ஆனது பங்குபற்றியது. அதேபோல், ICIT நிகழ்ச்சிகள் மற்றும் சில மாணவ கருத்திட்டங்களின் மேம்படுத்தலுக்காக ஒக்ரோபர் 24 முதல் 27 வரை நடைபெற்ற இன்பொடெல் (Infotel) கண்காட்சியிலும் UCSC ஆனது பங்குபற்றியது. பேராசிரியர் ஜிஹான் விக்கிரமநாயக்க அவர்கள் இந்நிகழ்வின் கல்விக்கான விசேட அடையாளத்தூதராக (brand ambassador) தெரிவு செய்யப்பட்டார்.

அட்டவணை 20 : மீண்டெழும் செலவுகள் ரூபா 000'

| பெயரும் விபரமும் | மானியம் | நிதியிடும் நிறுவனம் | TCE | RFA | DF |
|---|---|---|---|---|---|
| M-ATM (2008-11) | 7,596 | Royal Inst. of Tech.(KTH), சுவீடன் | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டெலி சென்டர்.Org (2010-11) | 2,856 | டெலிசென்டர் பவுன்டே. பிலிப்பைன்ஸ் | | | |
| வெளிநாட்டு நிதி | **10,452** | | | | |
| FASS (2011-2012) | 1,308 | பாதுகாப்பு அமைச்சு, இலங்கை | | | |
| Copsayura (2011-13) | 1,934 | தேசிய விஞ்ஞான மன்றம் | | | |
| உணவு பாதுகாப்பு -2012 | 2,808 | தேசிய விஞ்ஞான மன்றம் | | | |
| உள்நாட்டு நிதி | **6,050** | | | | |

TCE – மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு; RFA – விண்ணப்பங்களுக்கான கோரிக்கை; DF – கழிவு விடயம்

கருத்திட்ட செலவினம் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை)

அட்டவணை 21 : கருத்திட்ட செலவினம் ரூபா 000'

| பெயர் | TCE மீ/வ திரட்டிய கிரயம் | 2012 ஆண்டில் செலவு | 2013 ஆண்டில் செலவு | 31.12.2013இல் உள்ளபடி மொத்த செலவு | பௌதீக முன்னேற்ற % |
|---|---|---|---|---|---|
| M-ATM | 5,665 | 697 | 917 | 7,279 | 84% |
| டெலி சென்டர்.Org | 2,390 | 168 | 168 | 2,726 | 100% |
| வெளிநாட்டு கருத்திட்ட செலவு | 8,055 | 865 | 1,085 | 10,005 | |
| FASS | 40 | 970 | 458 | 1,468 | 77% |
| NSF | - | 1,709 | 608 | 2,317 | 88% |
| உணவு பாதுகாப்பு-2012 | - | - | 1,704 | 1,704 | 25% |
| உள்நாட்டு கருத்திட்ட செலவு | 40 | 2,679 | 2,770 | 5,489 | |

நிதிச் செயலாற்றல் (செலவினம்)

அட்டவணை 22: நிதிச் செயலாற்றல் (செலவினம்) ரூபா 000'

| விடயம் | ஒதுக்கீடு | செலவு | சேமிப்பு/மிகை |
|---|---|---|---|
| கருத்திட்டமல்லாத மீண்டெழுதல் | 239,426 | 221,888 | 17,538 |
| கருத்திட்டமல்லாத மூலதனம் | 57,250 | 74,815 | (17,565) |
| கருத்திட்டம் - உள்நாட்டு நிதியிடல் | 2,770 | 2,770 | - |
| கருத்திட்டம் - வெளிநாட்டு நிதியிடல் | 1,085 | 1,085 | - |
| மொத்தம் | **300,531** | **300,558** | (27) |

நிதிச் செயலாற்றல் (உருவாக்கப்பட்ட வருமானம்)

அட்டவணை 23: நிதிச் செயலாற்றல் (உருவாக்கிய வருமானம்) ரூபா 000'

| வருமான மூலம் | ஒதுக்கீடு | திரட்டுதல் | பற்றாக்குறை /மிகை |
|---|---|---|---|
| பட்டதாரிக் கற்கைகள் | 91,910 | 93,994 | 2,084 |
| பட்டப் பின்படிப்பு கற்கைகள் | 45,700 | 51,963 | 6,263 |
| ஆலோசனைகள் | 14,000 | 11,193 | (2,807) |
| வெளிவாரிப் பட்டம் | 68,394 | 78,708 | 10,314 |


| | | | |
|---|---|---|---|
| ஏனையவை | 68,143 | 74,357 | 6,214 |
| மொத்தம் | **288,147** | **310,215** | **22,068** |

பட்டதாரி வருமானம் நீங்கலாக UCSC ஆனது ரூ. 242, 025 ஐ உருவாக்கப்பட்ட வருமானமாக ஈட்டியது. UCSCஇன் உருவாக்கப்பட்ட வருமானமானது, அதன் பிரதான பல்கலைக்கழகம் உள்ளடங்கலாக பல பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களை விடவும் உயர்வானதாக இருந்தது. (வரைபு 2).

### நிதிச் செயலாற்றல் ஆய்வு

அட்டவணை 24: நிதிச் செயலாற்றல் பகுப்பாய்வு ரூபா 000'

| விடயம் | வாய்ப்பாடு | ஒரு மாணவருக்கான செலவு |
|---|---|---|
| ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவினம் (RE) | RE / மாணவர் எண்ணிக்கைப பலம் | 152 |
| ஒரு மாணவருக்கான மூலதனச் செலவினம் (CE) | CE / மாணவர் எண்ணிக்கைப பலம் | 81 |
| மொத்தம் | | **233** |




வரைபு 2: உருவாக்கப்பட்ட வருமானம்

### உட்கட்டமைப்பு வசதிகள் – 2013 இல் பெற்றுக்கொண்டவை

வரையறுக்கப்பட்ட இடத்தினுள்ளே செயலாற்றும் UCSC நிறுவகத்திற்கு விரிவுரை நடத்துவதற்கு கூட போதிய இடவசதியில்லை. மாணவர்களுக்கு சிற்றுண்டிச்சாலை, பொது மற்றும் கற்பிக்கும் அறைகளில் போதிய இடவசதியில்லை. பல்கலைக்கழகத்தினால் காணியை வழங்க முடியாதுள்ளதால் UCSC ஆனது மேற்குக் கட்டடப் பகுதியையும் நான்காம் மாடியையும் கட்டி

விஸ்தரிக்க தொடங்கியது பட்டதாரி பயிலுநர்களின் வகுப்பறை குறைபாடுகளை நிவர்த்திசெய்யவும் முழுநேர ஆய்வு மாணவர்களுக்கு இடவசதியை ஏற்பாடுசெய்து கொடுக்கவுமாகும். இக் கருத்திட்டமானது 2011 இல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், பல மாத நிர்மாண வேலை தாமதத்தின் பின்னர் 2013 யூன் 14ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறுங்கால உட்கட்டமைப்பு வசதிகளின் தேவைகளுக்கு முகங்கொடுப்பதுடன், விரிவாக்கல் திட்டமானது மத்திய மற்றும் நீண்ட கால இலக்குகளுக்கு முகங்கொடுக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள சிற்றுண்டிச்சாலை அமைவிடத்தில் சிற்றுண்டிச்சாலை மற்றும் நிருவாகக் கட்டடமொன்றையும் நிர்மாணிப்பதற்கு இனங்காணப்பட்டுள்ளதுடன், விரிவுரை மண்டபங்கள்/கற்கும் அறைகளுடன் இணைந்த கேட்போர்கூடமொன்றின் மூலம் தற்போதுள்ள கேட்போர்கூடத்தை மீளமைப்பது மத்தியகால இலக்குகளாகும். கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குப் புறம்பாக கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான தேவை நீண்டகால இலக்காக அடையாளம் காணப்பட்டுள்ளது. சிற்றுண்டிச்சாலை மற்றும் நிர்வாகக் கட்டடத் திட்டத்தின், சிற்றுண்டிச்சாலைப் பகுதி கட்டம் I ஆக இனங்காணப்பட்டு, ஒக்ரோபர் 31 ஆம் திகதி அடிக்கல் நாட்டலுடன் நிர்மாண வேலைகள் 2013 இல் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வேலைகள் 2014 செப்ரெம்பர் மாதமளவில் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டு இறுதியில் அத்திவாரம் சம்பந்தப்பட்ட நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. நிர்மாண வேலைகள் பற்றிய விபரங்கள் அட்டவணை 25 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 25: உட்கட்டமைப்பு ரூபா 000'

| உட்கட்டமைப்பு விபரம் | செலவினம் (ரூ.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| UCSC கட்டட விஸ்தரிப்பு | 60,628 | 100% |
| சிற்றுண்டிச்சாலை மற்றும் நிருவாக கட்டடம் – கட்டம் I | 20,533 | 30% |

## ஏனைய விபரங்கள்/ இவ் அறிக்கையுடன் தொடர்புடைய செயலாற்றல்

உள்நாடு மற்றும் சர்வதேசத்திற்கு தென்படும் தன்மையை அதிகரிப்பதற்காக UCSC இனது செயற்பாடுகளை அச்சு ஊடகத்தினுள் உட்படுத்தலை பேணிச்செல்வதுடன், UCSC இன் இணையதளத்தை மீளவடிவமைப்பதன் மூலம் பிரசன்னத்தை மேம்படுத்தவும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பக் கல்வியையும் உற்பத்திகளையும் எல்லைகளைத் தாண்டி கொண்டு செல்வது அதன் சமூகப் பொறுப்புக்களில் ஒன்றாக UCSC கருதுகிறது. மீளாய்வாண்டின் போது உயர் தர மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சியொன்றை, ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து அறிமுகப்படுத்துவதில் UCSC பங்கு வகித்தது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் (SLBC) இணைந்து ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் காலை 9 மணி முதல் 10 மணி வரை சமூக நிகழ்ச்சியினை UCSC ஆனது தொடர்ந்தும் நடாத்திவருகிறது. மேலும், சர்வதேச ஒலிம்பியாட் தகவலியல் (IOI) உட்பட மென்பொருள் போட்டிகளை நடாத்துவதற்காக UCSC தனது ஒத்துழைப்பினை கல்வி அமைச்சுக்கும் பாடசாலைகளுக்கும் வழங்கிவருகிறது. தலைவர் மற்றும் பிரதித் தலைவர் உட்பட மூன்று அங்கத்தத்துவ IOI குழு, யூலை 6 முதல் 13 வரை

அவுஸ்திரேலியாவில் நடாத்தப்பட்ட IOI'13 நிகழ்வில் பங்குபற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்டதுடன், இதற்காக UCSC ஆனது உதவி வழங்கியது. அத்துடன், மே 11ஆம் திகதி நடாத்தப்பட்ட ஆசியா பசுபிக் இன்பொமெடிக்ஸ் ஒலிம்பியாட் (APIO) போட்டியிலும் இக்குழுவானது போட்டியிட்டது.

சிங்கப்பூரிலுள்ள ரிபப்லிக் பொலிடெக்னின் நிறுவனத்தின மாணவர்கள் 24 பேர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருவர் கொண்ட குழுவானது யூன் 1ஆம் திகதி UCSC இற்கு வருகைதந்தனர். எமது மாணவர்களுக்கான பட்டப் பின்படிப்பு வாய்ப்புக்களை ஆராயும் பொருட்டு, கொரியா கத்தோலிக்க பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜியெங்னிங் (ஜோனி) ஸாஓ (Jiangning (Johnny) Zhao) அவர்கள் சனவரி மாதம் எமது நாட்டுக்கு வருகைதந்தார். ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு மடிக்கணினி (laptop) எனும் கோட்பாட்டிற்கிணங்க, பாடசாலைகளில் ஈ-கற்றல் (e-Learning) கருத்திட்டத்திற்கு இணைந்ததாக செயற்படுத்தும் வாய்ப்புக்களை ஆராய்வதற்காக கொரியாவிலுள்ள MarkAny கம்பனியின் உப தலைவரான ஜே.ஜே. கிம் (J J Kim) அவர்கள் சனவரி மாதம் வருகை தந்தார். எடின்பர்க் பல்கலைக்கழகத்தை சேர்ந்த கலாநிதி ஜேப் கிரெக்ஸன் (Dr. Geoff Gregson) அவர்களால் 2013 பெப்பிரவரி 19ஆம் திகதி மாணவர்கள் மற்றும் பணியாட்டொகுதியினருக்காக புலமைச்சொத்து தொடர்பான விரிவுரையொன்று நடாத்தப்பட்டது. உயர் கல்வி அமைச்சினது குறுகிய அபிவிருத்தித்திட்டக் கலந்துரையாடல் மற்றும் அதன் செயற்பாட்டு மீளாய்வு தொடர்பாகவும் சனாதிபதியுடனான கூட்டமொன்றும் மார்ச் மாதம் 1 ஆம் திகதி UGC இல் நடாத்தப்பட்டது. BIT மற்றும் வணிகமயமாக்கல் எனும் பெயரிலான UCSC கருத்திட்டங்கள் இரண்டு உள்ளடங்கிய மத்திய-கருத்திட்டங்களின் மீளாய்வுக்காக உலக வங்கியின் குழுவொன்று மே மாதம் 28ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு வருகைதந்தனர். எமது இறுதியாண்டு பட்டதாரி மாணவர்களுக்காக கணினிகள் 40 கொண்ட அன்பளிப்பான கெம்பியோ ஆய்வுகூடமானது (Cambio Research Lab) BOM, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோர்களின் பங்களிப்புடன் மார்ச் மாதம் 25 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்

கொழும்பு பல்கலைக்கழகம்

2013 திசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறான இணைந்த ஐந்தொகை

| சொத்துக்கள் | 2013<br>ரூ.<br>N.B.V | 2012<br>ரூ.<br>N.B.V |
|---|---|---|
| <u>நடைமுறையில்லாச் சொத்துக்கள்</u> | | |
| ஆதனம், பொறி, உபகரணம் | | |
| கட்டடம் | 71,371,639 | 12,643,800 |
| ஆய்வு கூடம், கற்பித்தல் உபரகணம், தளபாடம் மற்றும் பொருத்துகள் | 74,846,459 | 60,601,400 |
| நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகளும் | 973,843 | 990,690 |
| மோட்டார் வாகனங்கள் | 4,933,664 | 3,774,644 |
| மொத்தம் | 152,125,605 | 78,010,534 |
| மூலதன புனரமைப்பும் மேம்படுத்தலும் | 31,404,754 | 30,413,602 |
| நிர்மாணிப்பு - முடிவுறாத வேலை | 9,775,667 | 37,748,579 |
| <u>நடைமுறைச் சொத்துக்கள்</u> | | |
| பொருட்கள் இருப்பு | 3,198,314 | 2,442,445 |
| பெறவேண்டியவை, முற்கொடுப்பனவு | 88,669,647 | 38,602,043 |
| SIDA நிதி | - | - |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 651,587,603 | 581,177,143 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | 743,455,564 | 622,221,631 |
| மொத்தச் சொத்துக்கள் | 936,761,599 | 768,394,353 |
| சொத்துக்கள்/பங்குரிமை | | |
| <u>மூலதனமும் ஒதுக்கமும்</u> | | |
| <u>மூலதனம்</u> | | |
| செலவிடப்படாத மூலதன மானியம் | 19,451,866 | 4,857,245 |
| செலவிடப்பட்ட மூலதன மானியம் | 113,563,832 | 57,564,972 |
| வெ.நா. நிதி கருத்திட்.– செலவிடப்படாதது | 2,720,033 | 1,336,470 |
| வெ.நா. நிதி கருத்திட்.– செலவிடப்பட்டது | 21,334,025 | 30,803,032 |
| வேறுபட்ட மானியம் | | - |
| கொழும்பு பல்கலைக்கழக பங்களிப்பு | 8,155,714 | 8,155,714 |
| மொத்தம் | 165,225,470 | 102,717,433 |
| ஒதுக்கங்கள் | 464,395,995 | 433,117,827 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 3,000,000 | - |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதி | 70,067,477 | 67,859,485 |
| <u>நடைமுறையில்லா பொறுப்புக்கள்</u> | | |
| ஓய்வூதியப் பயன்கள் | 31,395,771 | 27,573,818 |
| <u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u> | | |
| ஏனைய சென்மதிகள், கொடுப்பனவுகள் | 202,676,886 | 137,051,170 |
| வங்கி மேலதிகப்பற்று | - | 74,620 |
| மொத்தம் | 202,676,886 | 137,125,790 |
| மொத்த சொத்துக்கள்/பங்குரிமை | 936,761,599 | 768,394,353 |

28.02.2013

……………………

பணிப்பாளர் (கொ.ப.கணி.கற்.நிறு.)

……………………

பிரதி நிதியாளர்

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்**

கொழும்பு பல்கலைக்கழகம்

2013 திசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான இனைந்த வரவு செலவுக் கணக்கு

| | 2013<br>ரூ. | 2012<br>ரூ. |
|---|---|---|
| பட்டமாணி நிகழ்ச்சித் திட்டம் | | |
| வருமானம் | | - |
| அரச மானியம் | 90,383,000 | 91,802,000 |
| நிறுத்தப்பட்ட வருமானம் - மானியங்கள் | 14,430,010 | 14,629,135 |
| ஏனையவை | 3,610,684 | 2,671,894 |
| | 108,423,694 | 109,103,029 |
| பட்டமாணி நிகழ்ச்சித் திட்டம் - செலவு | - | - |
| பணியாளர் கொடுப்பனவுகள் | 69,371,031 | 60,733,791 |
| போக்குவரத்துச் செலவுகள் | 623,097 | 37,701 |
| வழங்கல்கள் | 4,573,837 | 2,927,786 |
| ஒப்பந்தச் சேவைகள் | 33,428,209 | 26,818,704 |
| ஓய்வூதிய பயன்கள் | 16,183,766 | 13,726,350 |
| சந்தாக்கள், பங்களிப்புக்கள், அங்கத்துவ கட்டணம் | 105,530 | 36,929 |
| பணியாளர் அபிவிருத்தி | 19,000 | 106,270 |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 9,005,017 | 6,825,057 |
| தேய்மானம் | 16,818,989 | 14,629,135 |
| மொத்தம் | 150,128,476 | 125,841,723 |
| பட்டமாணி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பற்றாக்குறை | (41,704,781) | (16,738,694) |
| விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டம் | | |
| விஞ்ஞான முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் | 44,871,205 | 41,891,163 |
| வெளிவாரி பட்டங்கள் நிலையம் | 54,004,151 | 40,714,205 |
| கணினி சேவைகள் நிலையம் | 4,748,974 | 2,137,334 |
| உயர் தர டிஜிடல் ஊடக தொழில்நுட்ப நிலையம் | 1,054,794 | 827,464 |
| e கற்றல் நிலையம் | 10,384,270 | 18,105,244 |
| தொழில்சார் அபிவிருத்தி நிலையம் | (416,751) | (520,064) |
| விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்ட மேலதிக வருமானம் | 114,646,643 | 103,155,346 |
| கருத்திட்டங்கள் | | |
| வெளிநாட்டு நிதியிடப்பட்ட பொது கருத்திட்டம் | - | 10,792,226 |
| ICT மாநாடு | 1,624,264 | 147,339 |
| IDRC Vertual கிராமம் | (65,175) | 95,992 |
| கருத்திட்டங்களிலிருந்து மேலதிக வருமானம் | 1,559,089 | 11,035,557 |
| தீக்ஷ்ன | 644,080 | 836,968 |
| தேறிய மேலதிக வருமானம் /(பற்றாக்குறை) | 75,145,031 | 98,289,177 |

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்**

கொழும்பு பல்கலைக்கழகம்

2013 திசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான இணைந்த காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2013 ரூ. | 2012 ரூ. |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல் | | |
| வருடத்திற்கான மிகை/பற்றாக்குறை | 75,145,031 | 98,289,177 |
| **சீராக்கல்கள்** | | |
| தேய்மானம் | 29,786,429 | 25,210,600 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 4,693,425 | 4,407,740 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஒதுக்கீடுகள் பயன்பாடு | (18,548,443) | - |
| நிறுத்தப்பட்ட வருமானம் | (18,973,278) | (22,142,464) |
| முன்னர் பொறப்பட்ட மானியத்திலிருந்து மாற்றல் | (5,689,864) | (10,901,365) |
| ஆதனம், பொறி, உபகரணம் விற்பனை இலாபம் | (358,575) | (96,450) |
| நாணயமாற்றில் கிடைப்பனவு | (521,282) | (11,616,474) |
| தொழிற்படு மூலதன மாற்ற மிகை/குறைவு | 65,533,443 | 83,150,764 |
| | - | - |
| தொழிற்படு மூலதன மாற்றல் | 16,344,815 | 9,792,438 |
| தொழிற்பாட்டு நடவடிக்கை மூலம் தேறிய காசுப்பாய்ச்சல் | 81,878,258 | 92,943,202 |
| | - | - |
| முதலீட்டு நடவடிக்கை மூலம் காசுப்பாய்ச்சல் | | |
| ஆதனம், பொறி, உபகரணம் கொள்வனவு | (39,329,243) | (16,146,779) |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் | (59,904,934) | (22,327,823) |
| ஆதனம், பொறி, உபகரணம் விற்பனை மூலம் பெற்றது | 365,000 | 96,450 |
| ஆதனம், பொறி, உபகரணம் புனரமைப்பும் மேம்படுத்தலும் | (3,775,562) | (1,905,331) |
| | (20,766,481) | 52,659,719 |
| | - | - |
| நிதியிடல் நடவடிக்கை மூலம் தேறிய காசுப்பாய்ச்சல் | | |
| பெற்றுக்கொண்ட மூலதன மானியம் | 71,371,616 | 19,150,000 |
| பெற்றுக்கொண்ட கருத்திட்ட மானியம் | 7,105,427 | 5,639,052 |
| முடிவடைந்த திட்ட மீதிகளிலிருந்து மாற்றல் | (1,790,632) | (3,340,857) |
| ICT மாநாடு | - | 1,191,152 |
| பணிக்கொடை செலுத்தியது | (934,588) | (227,160) |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதிகளிலிருந்து பெறுப்பனவுகள் | 14,978,456 | 12,904,748 |
| காசும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/குறைவு | 69,963,798 | 87,976,654 |
| நாணயமாற்றில் கிடைப்பனவு (நட்டம்) | 521,282 | 11,616,474 |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவை | 581,102,523 | 481,509,395 |
| வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவை | 651,587,603 | 581,102,523 |

## கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்
## நிதியியல் முக்கிய அம்சங்கள்

ரூ. '000

| நிதி ஆண்டு | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|---|
| அரச மானியம் - மீண்டெழும் | 90,383 | 91,802 | 83,102 | 65,381 | 68,610 | 71,555 | 78,695 | 52,850 |
| அரச மானியம் - மூலதனம் | 25,759 | 19,150 | 16,000 | 4,920 | 4,167 | 11,055 | 10,560 | 36,740 |
| பெறப்பட்ட மொத்த அரச மானியம் | 116,142 | 110,952 | 99,102 | 70,301 | 72,777 | 82,610 | 89,255 | 89,590 |
| மீண்டெழும் செலவு - பட்டதாரி நிகழ்ச்சி | 133,190 | 111,212 | 92,310 | 80,120 | 84,461 | 80,083 | 76,564 | 65,617 |
| மூலதனச் செலவு | 71,371 | 31,178 | 28,628 | 21,301 | 8,542 | 12,764 | 12,305 | 29,064 |
| மொத்தச் செலவு பட்டதாரி நிகழ்ச்சி | 204,561 | 142,390 | 120,938 | 101,421 | 93,003 | 92,847 | 88,869 | 94,681 |
| உருவாக்கப்பட்ட வருமானத்தின் பங்களிப்பு | 88,419 | 31,438 | 21,836 | 31,120 | 20,226 | 10,237 | - | 5,091 |
| உரு. மொத். வருமானத்தின் பங்களிப்பு - % | 37% | 16% | 14% | 25% | 17% | 10% | 0% | 9% |
| உரு. மொத். தேறி. வருமான. பங்களிப்பு - % | 63% | 28% | 28% | 62% | 35% | 18% | 0% | 21% |
| உருவாக்கப்பட்ட வருமானம் | 242,025 | 194,230 | 159,429 | 123,267 | 115,690 | 105,426 | 68,494 | 58,981 |
| மீண்டெழும் செலவு – விரிவாக்கல் நிகழ்ச்சிகள் | 102,173 | 82,390 | 80,197 | 73,313 | 58,399 | 47,316 | 40,117 | 35,141 |
| வெளிநாட்டு நிதி திட்ட. பெறப்பட்ட மானியம் | 9,341 | 5,639 | 6,202 | 93,581 | 104,834 | 70,969 | 35,700 | 46,356 |
| உள்வாரி மாணவர் எண்ணிக்கை | 879 | 737 | 737 | 739 | 748 | 754 | 584 | 592 |
| பணியாளர்களின் எண்ணிக்கை | 144 | 144 | 144 | 151 | 162 | 156 | 147 | 139 |
| மாணவரொருவருக்கான மீண்டெழும் கிரயம் ஆண்டுக்கு ( '000 ) | 152 | 151 | 125 | 108 | 113 | 106 | 131 | 111 |
| மாணவரொருவருக்கான மூலதன கிரயம் ஆண்டுக்கு ( '000 ) | 81 | 42 | 39 | 29 | 11 | 17 | 21 | 49 |
| பணியாளரொருவருக்கான கிரயம் வருடத்திற்கு ( '000 ) | 774 | 670 | 578 | 457 | 414 | 384 | 372 | 359 |

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
# கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
# AUDITOR GENERAL'S DEPARTMENT


මගේ අංකය / எனது இல. / My No. } ඊසී/සී/යුසීඑස්සී/1/13/එෆ්ජ්

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2015 මැයි 18 දින

UNIVERSITY OF COLOMBO, SCHOOL OF COMPUTING
25 MAY 2015
DIRECTOR'S OFFICE

අධ්‍යක්ෂ,

කොළඹ විශ්වවිද්‍යාලීය පරිගණක අධ්‍යයන ආයතනය

**කොළඹ විශ්වවිද්‍යාලීය පරිගණක අධ්‍යයන ආයතනයේ 2013 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2002 අංක 01 දරන කොළඹ විශ්වවිද්‍යාලීය පරිගණක අධ්‍යයන ආයතනය නියමාවලියේ 23 වගන්තිය හා 1978 අංක 16 දරන විශ්වවිද්‍යාල පනතේ 108(1) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව**

---

මාගේ සමාංක හා 2015 මාර්තු 12 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්.පී.සී. වික්‍රමරත්න

විගණකාධිපති (වැඩබලන)

පිටපත්:
1. ලේකම් - මුදල් අමාත්‍යාංශය
2. ලේකම් - මහාමාර්ග, උසස් අධ්‍යාපන හා ආයෝජන ප්‍රවර්ධන අමාත්‍යාංශය
3. සභාපති - විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
4. උපකුලපති - කොළඹ විශ්වවිද්‍යාලය




අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துாவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் படி, ரூபா 751,961 தொகையான ஊழியர் கடன் மீதி பல வருட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2009 யூன் 06 ஆந் திகதிய UGC/IUA/2/PGS/06 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடிதம் மற்றும் UGC/HR/6/1/13(1) ஆம் இலக்க கடிதம் | பட்டப்பின் படிப்பு பாடநெறிக்கு வெளிவாரி விரிவுரையாளர்களின் விரிவுரைக் கட்டணம் ஒரு மணித்தியாலத்திற்கான வீதம் ஆகக்கூடியதாக ரூபா 2,500 இருக்க வேண்டியதுடன் அந்த ஆகக் கூடிய எல்லை பல்கலைக்கழக செனட்சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் பட்டப்பின் படிப்பு கற்கைப் பிரிவில் வெளி விரிவுரையாளர் விரிவுரைக் கட்டணமாக பல்கலைக்கழக செனட் சபையின் அங்கீகாரமின்றி ஒரு மணி நேர விரிவுரைக்காக ரூபா 4,000 படி ரூபா 1,134,594 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2013 திசெம்பர் 31 ஆந் திகதிய பீஈ/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபம் | (i) நிதியத்தை முகாமை செய்வதற்காக உப விதிகள் வழங்கப்படாது ரூபா 5,782,431 பெறுமதியான நிதியம் பேணப்பட்டிருந்தது.<br>(ii) சுற்றுநிருபத்தின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்திற்கான வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு தேவையான அங்கீகாரத்தைப் பெற்று அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்திற்குச் |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் உள்ளவாறான செயலாற்றல் அறிக்கை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நியதிகளின் படி ஆரம்பக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்படாமல் அக்கோவையின் 7.9.11 இன் பிரகாரம் செயலாற்றல் இயலுமை பரீட்சிக்கப்படாது 2012 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு, காணப்படுகின்ற மென்பொருள் முறைமையை நாளதுவரையாக்குவதற்காக கொள்வனவு இலக்கம் UCSC/QUA/ADM/2012/134 இன் கீழ் அசாதாரண ஏற்றுக்கொள்ள முடியாத அளவுகளுடன் ஆகக் குறைந்த கூறுவிலையில் கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி 2013 சனவரி 31 ஆந் திகதியில் உள்ளவாறு இறுதி அறிக்கை நிறுவகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறின்றி ரூபா 112,500 தொகை 2013 ஒக்தோபர் 30 ஆந் திகதி அந்நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இச் செயற்பாடுகளை உரிய நிறுவனத்திலிருந்து நிறைவேற்றாது நிறுவகத்தின் பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டு மீளவும் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ஆ) உடன்படிக்கைகயை மீறிய 06 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 13,214,866 தொகை அறவிட வேண்டியிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) உடன்படிக்கையை மீறிய விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து நிறுவகத்திற்கு அறவிடவேண்டிய ரூபா 1,277,930 தொகை 2012 ஒக்தோபர் 15 ஆந் திகதி விரிவுரையாளர்களின் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டிருந்தும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 24 ஆவது பிரிவிற்கு இணங்க நிறுவக விதிக்கோவையின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட கணனி சேவை நிலையத்தின் நோக்கம், இலக்கு மற்றும் செயற்பொறுப்புக்களுக்கு இணையாக நேரடியாக போட்டியாளர்களை உருவாக்கும் வகையில் 2002 இன் 01 ஆம் இலக்க விதிக்கோவையின் 18 ஆவது பிரிவிற்கு முரணாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் படி கம்பனிச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட "தீக்ஸன" கம்பனி உருவாக்கப்பட்டிருந்தது.

(ஆ) வரையறுக்கப்பட்ட தீக்ஸன கம்பனி மீளாய்வாண்டிற்காக ரூபா 10,327,760 தொகையான வருமானத்தை உழைத்திருந்ததுடன் விரிவுரைப்படியாக ரூபா 7,129,852 தொகை (70 சதவீதம்) பதவியணியினருக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. கம்பனியின் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 134,405 ஆக இருந்ததுடன் அவ்வப்போதான செயலாற்றலின் போது "தீக்ஸன" கம்பனியில் காணப்பட்ட சொத்துக்களின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக நிறுவகத்தின் வளங்கள் ஈடுபடுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக் கட்டுப்பாடு
(ஆ) உடன்படிக்கை மற்றும் பிணைமுறி
(இ) கொள்வனவு நடவடிக்கைகள்
(ஈ) நிதியக் கட்டுப்பாடு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

(மொழிபெயர்ப்பு)

2015 ஏப்பிரல் மாதம் 30ஆம் திகதி

கணக்காய்வாளர் தலைமையதிபதி
கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்
இலக்கம் 306/72, பொல்துவ வீதி
பத்தரமுல்லை.

**கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகத்தின் 2013 திசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மீது 2002 இன் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவக சட்ட விதிகளின் 23 ஆம் பிரிவு மற்றும் 1978 ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவு ஆகியவற்றின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்.**

2. நிதிக் கூற்றுக்கள்

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2013 ஆண்டில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஈட்டப்பட்ட வருமான செலவு மீதியான ரூ. 986,823.27, பின்வரும் மீதிகள் இரண்டினதும் தேறிய பெறுமதிகளை உள்ளடக்கியுள்ளது.

| | |
|---|---|
| நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஈட்டப்பட்ட வருமானம் (Retaind Earnings) (செலவு) | 2,270,339.89 |
| வரலாற்று ரீதியான மீதி (Historical Balance) (வரவு) | 3,257,163.16 |
| | 986,823.27 |

இது எம்மால் பயன்படுத்தப்படும் கணக்கீட்டுப் பொதியின் படி காட்டுகின்ற குறிப்பாகும்.

இருப்பினும், 2014 ஆண்டின் ஆரம்பத்தில் சம்பந்தப்பட்ட சீராக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) நிலையான சொத்துக்கள் அட்டவணையின் வருடத்தின் உள்ளபடியாக கொள்வனவு செய்த சொத்துக்களின் பெறுமதியை வெளிக்காட்டுவதுடன், காசுப் பாய்ச்சல் கூற்றில் சொத்துக்களின் கொள்வனவாக காட்டப்பட்டுள்ளவை உள்ளபடியாக வருடத்தினுள் காசு மூலம் செலுத்தப்பட்ட தொகையாகும்.

2.3 <u>பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்</u>

<u>அறவிடப்படாது காணப்பட்ட கடன் மீதிகள்</u>

| பெயர் | மீதி | கடன் வகை |
|---|---|---|
| 1. திரு. எஸ்.எஸ். பஹிதரன் | 137,648 | இடர் கடன் |
| 2. திரு. எம்.எம். லக்ஷ்மன் | 226,310 | இடர் கடன் |
| 3. திருமதி ஐ.எம்.எஸ். பிரியலதா | 218,067 | இடர் கடன், வாகனக் கடன் |
| 4. திரு. என்.சி.ஜீ. லியன்கே | 24,100 | இடர் கடன் |
| 5. திரு. எஸ்.சி.ஜீ.எம். சில்வா | 55,836 | இடர் கடன் |
| 6. வை. ஏக்கநாயக்க | 90,000 | வாகனக் கடன் |
| | 751,961 | |

1. **திரு. எஸ்.எஸ். பஹிதரன் - இடர் கடன் ரூ. 137,648/-**

பிணை உத்தரவாதத்தை மீறியதற்காக அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்ற நடவடிக்கையின் முடிவில் அவரிடமிருந்து அறவிடப்படவேண்டிய தொகையுடன் இடன் கடன் மீதியான ரூ. 137,648/- ஆன தொகையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2. **திரு. எம்.எம். லக்ஷ்மன் - இடர் கடன் ரூ. 226,310/-**

2014.11.27 திகதி மேற்படி கடன் மீதியான ரூ 226,310/- ஆன தொகையில் ரூ. 215,515/- ஐ அவரது சேமலாப நிதி பணத்திலிருந்தும், மிகுதித் தொகையான 10,975/- ஐ காசாகவும் நிறுவகத்திற்குச் செலுத்தி முழுமையாகத் தீர்க்கப்பட்டுள்ளது.

3. **திருமதி ஐ.எம்.எஸ். பிரியலதா - இடர் கடன் ரூ. 190,067/-, வாகனக் கடன் ரூ. 28,000/-**

2014.11.17 திகதி திருமதி ஐ.எம்.எஸ். பிரியலதா அவர்களது சேமலாப நிதி பணத்திலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட கடன் தொகைகளான இடர் கடன் ரூ. 190,067/- மற்றும் வாகனக் கடன் மீதியான ரூ. 28,000/- என்பவற்றை அறவிட்டுக்கொண்டு, மிகுதித் தொகை விடுவிப்புச் செய்யப்பட்டது. இதனால், 2014.11.17 ஆம் திகதியளவில் திருமதி ஐ.எம்.எஸ் பிரியலதா அவர்களின் கடன் தொகையான ரூ. 218,067/- முழுமையாக அறவீடு செய்யப்பட்டுள்ளது.

4. **திரு. என்.சி.ஜீ. லியனகே - இடர் கடன் ரூ. 24,100/-**

திரு. என்.சி.ஜீ. லியனகே அவர்களது இடர் கடன் மீதியான ரூ. 24,100/- ஐ அவரது பல்கலைக்கழக சேமலாப நிதியிலிருந்து அறவிட்டுக்கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

5. திரு. எஸ்.சி.ஜீ.எம். சில்வா - இடர் கடன் ரூ. 55,836/-

சில்வா அவர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய இடர் கடன் மீதியான ரூ. 55,836/- தொகையினை அவரது பல்கலைக்கழக சேமலாப நிதியிலிருந்து அறவிட்டுக்கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

6. வை. ஏக்கநாயக்க - வாகனக் கடன் ரூ. 90,000/-

மேற்படி வாகனக் கடன் தொகை மாதாந்தம் தொடர்ச்சியாக அறவீடு செய்யப்படுவதுடன், 2014.12.31 திகதியில் அதன் மீதி ரூ. 68,000/- ஆகும்.

2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

(அ) எமது நிறுவகத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற பட்டப் பின்படிப்பு பாடநெறிகளின் தரத்தினைப் பேணுவதற்காக தொழில்வாண்மை மிக்க போதனையாளர்களை ஈடுபடுத்த வேண்டியுள்ளதால், அதற்காக அவசியப்படும் மணித்தியாலமொன்றுக்கு ரூ.4000/- படி கொடுப்பதற்கான அங்கீகாரத்தை வழங்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அக் கோரிக்கையினை கவனத்திலெடுத்து, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது UOC/HR/6/1/13(1) எனும் இலக்கமுடைய கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளதாவது, பட்ட பின்படிப்பு பாடநெறிகள் தொடர்பாக மணித்தியாலமொன்றுக்குச் செலுத்தும் உச்ச அளவு சம்பந்தமாக பல்கலைக்கழகத்தினது நிர்வாக சபையின் ஊடாக முடிவு மேற்கொள்ளப்படுதல் வேண்டுமெனவாகும்.

கொழும்புப் பல்கலைக்கழக கணினி கற்கைகள் நிறுவகத்தின் நிதிசார் தீர்மானங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்படுவது இந் நிறுவகத்தினது முகாமைத்துவச் சபையின் மூலமாகவேயன்றி, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் அல்ல என்பதனால், பட்டப் பின்படிப்பு போதனைகளுக்காக மணித்தியாலமொன்றுக்கு செலுத்தும் தொகையினை (நிதிசார் சுயாதீனத்தை கொண்டிருப்பதனால்) கொழும்புப் பல்கலைக்கழக கணினி கற்கை நிறுவகத்தின் முகாமைத்துவ சபையியே தீர்மானம் செய்யவேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

2.4(ஆ) i. நிறுவகத்தின் மூலம் ஈட்டப்படும் பல்வேறு பாடநெறிகளின் ஊடாக நிலையான விகிதமொன்றைப் பயன்படுத்தி கட்டியெழுப்பப்பட்ட சொத்துக் கொள்வனவு நிதியமாகும். UCSC நிறுவகத்தின் கற்கை நடவடிக்கைகளின் தரமானது அதற்காகப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப உபகரணங்களின் மீதே தீர்மானிக்கப்படுவதுடன், அது சம்பந்தமாக போதியளவு நிதி திறைசேரி ஏற்பாடுகளின் மூலமாக கிடைக்காததனால் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் மேற்படி நிதியம் உருவாக்கப்பட்டது.

2.4(ஆ) ii. நிறுவகத்தின் கல்விசார் பணியாட்டொகுதியினரின் தரத்தை உயர்த்துவதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்ளல், அதன் முடிவுகளை வெளியிடுதல் மற்றும் ஆய்வுப் பெறுபேறுகளை தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பிரசித்தப்படுத்துதல் என்பவற்றுக்குத் அவசியமானளவு தொகை திறைசேரி ஏற்பாடுகளின் கீழ் கிடைக்காததன் காரணமாக நிறுவகத்தினால் ஈட்டப்படும் வெளிவாரி பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு பாடநெறிகளின் ஏதேனும் விகிதத்தினை மாற்றல் செய்து குறிப்பிட்ட நிதியத்தை உருவாக்குவதற்கு முகாமைத்துவ சபையினது அங்கீகாரத்தின் கீழ் செயற்பட்டுள்ளதுடன், அக் குறிப்பிட்ட நிதியத்தின் செலவினம் தொடர்பான சட்டவிதிக் கோவையும் முகாமைத்துவச் சபையினால் அங்கீகரிப்பு செய்யப்பட்டுள்ளதுடன், அச் சட்டவிதிக் கோவைக்கு இணங்க அது சம்பந்தப்பட்ட செலவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) நிறுவகத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சகல கொள்வனவுகளும் ஒழுங்காக உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், நிறுவகத்திலிருந்து நீக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்தல் மேற்கொள்ளப்படவில்லை.

2015 ஆண்டின் ஆரம்பத்தில், நிலையான சொத்துக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்தல், சொத்துக்களுக்கு இலக்கமிடுதல், கணினி மயப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் பற்றிய தரவுக் கோவையொன்றைத் தயாரித்தல் மற்றும் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக முறையான அனுமதியினைப் பெற்று விலைமனுக்கள் கோருதல் என்பன தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஈ) கல்விசார் பணியாட்களுக்கான ஆய்வுப் படி கொடுப்பனவுகள் 2011 ஏப்பிரல் 20 ஆம் திகதியும் 1/2011 இலக்கமும் கொண்ட சுற்றறிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதற்கான சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

செயலாற்றல் தொடர்பான அறிக்கையும் அதுசார்ந்த ஆவணங்களும் 2014 திசம்பர் 22ஆம் திகதி அரச கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4.2 (அ) 2012 ஆண்டுக்கான பொருட்கள் கணக்கெடுப்பு, நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை இற்றைப்படுத்துதல் மற்றும் bar code உடன் கூடிய ஸ்டிகர்கள் ஒட்டுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கான விலைமனுக்கள் கோரப்பட்டதுடன், அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைகளுள் ஆகக் குறைந்த விலையைக் கொண்ட மாகமகே அன்ட் கம்பனி (பட்டயக் கணக்காளர்கள்), தங்களால் மேற்கொள்ளப்பட்ட இதுபோன்ற ஒப்பந்தங்கள் பற்றிய விபரங்களை வழங்கியதுடன், அது தொடர்பாக ஒழுங்கான விசாரணையின் பின்னர் திருப்தியடைந்ததனால் மேற்படி நிறுவனத்திற்கு கணக்கெடுப்பு வேலை வழங்குவது சம்பந்தமாக நியமனம் செய்யப்பட்ட

தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்ததுடன், அதற்கிணங்க அவர்களிடம் ஒப்பந்த வேலை வழங்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதமளவில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்துக்கு ஏற்ப பூர்த்திசெய்யப்பட வேண்டிய வேலைகளில் அதிகளவான பகுதி பூர்த்திசெய்யப்பட்டு அறிகை வரைவொன்று (draft report) சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாலும், வேலையின் எஞ்சிய பகுதியினை பூர்த்திசெய்வதற்காக முழுத் தொகையையும் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதனாலும், அக் கோரிக்கையினைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காக கூடிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப ஒப்பந்தத் தொகையில் 50% ஐ மாத்திரம் கொடுப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்டது.

(ஆ) (i) ஒப்பந்தத்தை மீறிய விரிவுரையாளரான திரு. ஆர்.கே. ராஜபக்ஷ அவர்களிடமிருந்து, குறிப்பிட்ட தொகையை அறவிட்டுக் கொள்வதற்காக சட்டமா அதிபருக்கு பணிப்பாளர் அவர்களால் 2006.02.10 திகதி அனுப்பப்பட்ட கடிதத்தின் படி, சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இலக்கம் DMR/07249/2010 என்பதன் கீழ் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது. அவ்வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நடைபெறுகிறது. அவ்வழக்கு 2014.12.09 ஆம் திகதியும் 2015.03.06 ஆம் திகதியும் அழைக்கப்பட்டிருந்ததுடன், மீண்டும் 2015.05.05 ஆம் திகதி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த விரிவுரையாளர் ஒப்பந்தத்தை மீறியதற்கான தொகையினை செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. அவர் நீதிமன்றத்திற்கு கூறியிருப்பதாவது, அவரது ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட விமானப் பயணச்சீட்டு கட்டணத்தில் (செல்கை மற்றும் வருகை) அரைவாசியைத் தவிர மிகுதித் தொகையை செலுத்துவதற்கு இணங்குவதாக தெரிவித்துள்ளார். அதற்கான காரணம், அவர் மீண்டும் இலங்கைக்கு வராததனால் ஆகும். ஆனாலும், விமானப் பயணக் கட்டணமும் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக வழக்கு விசாரணை தொடர்ந்தும் நடைபெறுகிறது.

(ii) விரிவுரையாளர் எஸ்.கே. பஹீரதன், ஒப்பந்தத்தை மீறி வெளிநாடு சென்றதன் காரணமாக அவருக்கு எதிராகவும் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இலக்கம் DMR/07902/10 என்பதன் கீழ் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆனாலும், அவர் வதிவிட முகவரியில் இருந்து நீங்கியுள்ளதால் வழக்கை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாமல் வழக்கு ஆவணக்கோப்பு நீதிமன்றத்தில் உள்ளது. இவர் வதியும் அல்லது இருக்கும் இடத்தை கண்டுபிடிப்பதற்கு நிறுவகத்தின் நிருவாகமானது பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ள போதிலும் அவை பயனளிக்கவில்லை. இவ் இவ்வாறிருக்க, 2014 திசம்பர் மாதத்தில் ஒருநாள் அவர் இலங்கைக்கு வந்ததாக தகவல் கிடைத்ததால், அவர் மீண்டும் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதற்காக இது தொடர்பாக குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு தொலைபேசியின் ஊடாக அறிவிக்கப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் அவர்களால், பஹீரதன் அவர்களின் சுய விபரங்களை கொண்டு பரிசீலனை செய்துபார்த்ததன் பின்பு, அவர் இலங்கைக்கு வரவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனாலும், திரு. பஹீரதன் இலங்கைக்கு வந்திருந்ததை நேரில் கண்டவர்கள் இருப்பதாக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அறிவித்தபோது அவர், திரு. பஹீரதன் வேறு நாடொன்றுக்குரிய கடவுச்சீட்டின் மூலம் வேறு பெயரில் வந்திருக்கலாம் எனவும், அவற்றைத் தடுப்பதற்கு தற்போதுள்ள முறைமைகள் வலுவற்றன எனவும் தெரிவித்தார். சம்பவம் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் தெரிவித்தபோது, வழக்குக்கு பொறுப்பான அரச தரப்பு சட்டத்தரணி இது தொடர்பாக மோசடி விசாரணைப் பிரிவுக்கு அறிவித்து மேலதிக சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு தொலைபேசியில் கூறியுள்ளார். அந்த ஆலோசனையின் படி அவருக்கு எதிராக கொழும்புப் பிரதேசத்திற்குப் பொறுப்பான மோசடி விசாரணைப் பிரிவுக்கு முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களால் நீதிமன்றத்திற்கு விடயங்கள் தெரியப்படுத்தப்பட்டு, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு இணைந்த வகையில் திரு. பஹீரதன் அவர்களுக்கு எதிராக சர்வதேச சிவப்பு பிடியாணையொன்றை வெளியிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகிறது.

(இ) பிணை உத்தரவாதத்தில் கைச்சாத்திடுவது விரிவுரையாளர்கள் வெளிநாடு செல்வதற்கு முன்பாகும். இத் தொகை மாற்றமடையாது. ஆனாலும், அவர் பிணை உத்தரவாதத்தை மீறும் போது அத்தொகையினை அறவீடு செய்வதற்கு காலமெடுக்கும். சில சந்தர்ப்பங்களில் அவரின் வதிவிட நீங்கிச்செல்லல் அல்லது அவர்களால் நூலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட புத்தகங்களை மீள ஒப்படைக்காததனால் அதற்குரிய பணத்தை அறவீடு செய்தல் அல்லது அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தல் என்பவற்றினால் காலதாமதமாவது நிருவாகத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களாகும். இது போன்ற காரணங்களால் காலதாமதம் ஏற்படும் போது சம்பந்தப்பட்ட கணக்குகளின் மீதிகளும் அதிகரிக்கின்றன. தற்போது இது தொடர்பாக கிடைத்துள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் மத்தியஸ்தங்கள் போதாமையினால் இவ்வாறான பிரச்சினைகள் எழுந்துள்ளன என்பது விடயங்களை ஆராயும் போது தெரியவந்தன. இப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உதவியோடு அந்தந்த சேவை வழங்குபவர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் உடனடியாக அவரது சேமலாப நிதியப் பணத்தை விடுவிப்புச் செய்வதற்கும் ஒப்பந்தத்தை முறித்தவர்கள் இருந்தால் அவர்களது சேமலாப நிதிய மீதியை முடக்கி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) ஒப்பந்தத்தை முறித்தவர்களுக்கு எதிராக துரிதகெதியில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனாலும், சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளும் போது சில சந்தர்ப்பங்களில் 1 இலிருந்து ஒருசில வருடங்கள் சென்றுள்ளன என்பது ஆவணக்கோப்புக்களை ஆராயும் போது தெரியவந்துள்ளது.

## 4.3 அபிப்பிராயபேதத்தை உண்டாக்கும் கொடுக்கல்வாங்கல்

பயன்படுத்த முடியாத பொருட்களை, கணக்கீட்டு பொறுப்புக்கூர் உத்தியோகத்தரால் நியமனம் செய்யப்பட்ட கணக்கெடுப்பு சபையினது பரிந்துரையின் படி நீக்கம் செய்யபட்டது.

சம்பந்தப்பட்ட சொத்துக்களை அடையாளம்கண்டு, அவற்றை நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வருடத்தில் இவ்வாறான சிக்கல்கள் எழாது இருப்பதற்கும் சொத்துக்களை அடையானம்காணும் எண் முறைமையை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதன் முன்னேற்றம் மற்றும் இறுதிப் பெறுபேறுகள் தொடர்பாக கணக்காய்வாளர் நாயகமவர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

4.4 **செயற்படுத்தப்படாத நிதியம்**

செயற்படுத்தப்படாத நிதியமெனக் காட்டப்பட்டுள்ள சகல நிதியங்களும் நிதியீட்டாளர்களின் பரிந்துரையுடன் முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று 2015 ஆண்டின் ஆரம்பமளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

4.4 **வரையறுக்கப்பட்ட தீக்ஷ்ன கம்பனி**

(அ) கொழும்புப் பல்கலைக்கழக கணினி கற்கைகள் நிறுவகத்தின் ஸ்தாபகர், வித்தியாஜோதி பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க அவர்களின் கீழே குறிப்பிடப்படும் சிபாரிசுகளின் படி கொழும்புப் பல்கலைக்கழக கணினி கற்கைகள் நிறுவக முகாமைத்துவச் சபையானல் மேற்கொள்ளப்பட்ட ஆழமான விடய ஆய்வின் பின்னர் இந்த வரையறுக்கப்பட்ட தீக்ஷ்ன கம்பனி உருவாக்கப்பட்டது.

(i) சர்வதேச தரத்திலான பல்கலைக்கழகங்களினால் தமது ஆய்வுகளின் பெறுபேறுகளை வணிகமயமாக்கலின் (Commercialization) போது பின்பற்றப்படும் நடைமுறைகளை நாமும் பின்பற்றுதல் வேண்டுமென செய்யப்பட்ட பிரேரணையினாலும்,

(ii) சர்வதேச நிதி வழங்கல் நிறுவனங்களான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்கள் என்பவற்றினால் செயற்படுத்தப்படுகின்ற வெளிநாட்டுக் கருத்திட்டங்களின் ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் இதுபோன்றதொரு கம்பனியை உருவாக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. ஆயினும், இலங்கையில் யுத்த நிலைமையொன்று நிலவிய காலகட்டத்தில் இவ்வாறான ஆலோசனை சேவையினை இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புபட்ட நிறுவகமொன்றின் (UCSC) ஊடாக செயற்படுத்துவதற்கு இந் நிறுவகம் விருப்பமின்மையை வெளிப்படுத்தியதாலும்,

(iii) அதேபோல், இலங்கையில் நிறுவப்பட்டுள்ள ஏனைய சகோதர பல்கலைக்கழகங்களினாலும் இந்த எண்ணக்கருவினை பின்பற்றியுள்ளதனாலும்,

(iv) பல்கலைக்கழகத்தினுள் கற்கைச் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற உள்ளக மாணவர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் அனுபவத்தை (Internship) பெற்றுக்கொடுப்பதற்காகவும்,

(v) தனியார் துறையின் ஆலோசனை சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் போட்டித் தன்மையான ஆலோசனை சேவை சந்தை அனுகூலங்களைப் பெற்றுக்கொள்தற்கும்,

இவற்றுக்கு மேலதிகமாக, இக் கம்பனியினால் இலங்கை அரசாங்கத்திற்கு கணினி தொழில்நுட்பம் மற்றும் உசாத்துணை சேவைகள் பெருமளவில் பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளதுடன், அதன் அடிப்படையில் ICT முகவராண்மை ஊடாக கட்டியெழுப்பப்பட்ட தொடர்புகளின் மூலமாகவும் பிரசித்தமான மென்பொருள் அபிவிருத்திக் கம்பனி மற்றும் ஆலோசனையாளர்களுடன் இணைந்து சர்வதேச ஆலோசனை மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், அதனூடாக சுமார் இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர் அன்னியச்செலாவணியையும் ஈட்டிக்கொண்டுள்ளது.

இவ்வாறான பல செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஆற்றல் கிடைத்துள்ளதானது இக் கம்பனியுடன் வாணிபத்தில் ஈடுபட மூன்றாம் தரப்புக்களிடம் காணப்பட்ட விருப்பத்தினால் என்பதுடன், இந் நிறுவனம் எவ்வகையிலும் கொழும்புப் பல்கலைக்கழக கணினி சேவைகள் நிலையத்துடன் (CSC) போட்டி ரீதியிலான நிறுவனமொன்றல்ல என்பதை மிகவும் தெளிவாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, இறுதியாக நிறுவனத்திற்கு கிடைக்கும் ஆலோசனை சேவைகள் கணினி சேவைகள் நிலையத்திற்கோ அல்லது தீக்ஷ்ன கம்பனிக்கோ வழங்கப்பட்டாலும் இறுதிப் பலன் UCSC நிறுவனத்தின் கீழ் திரட்டிய நிதியத்திற்கே வரவு வைக்கப்படுகிறது.

மேலும், 2002 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வழிகாட்டி நூலின் மூன்றாவது (3) பிரிவின் ^´ & உப பிரிவின் படி கற்கை நிறுவகத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கம் என்பவற்றை அடைந்து கொள்வதற்காக அதன் அதிகாரம், பணி மற்றும் செயற்பாடுகளுடன் தொடர்பான அல்லது அதன் காரணமாக தேவையான வேறு சகல விடயங்களையும் செய்வதற்கு அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

அதன்படி, இந்த வரையறுக்கப்பட்ட தீக்ஷ்ன கம்பனி உருவாக்கப்பட்டிருப்பதுடன், அது கணினி சேவைகள் நிலையத்திற்கு போட்டித் தன்மையான நிறுவனமொன்றுமல்ல.

(ஆ) கணினி தொழில்நுட்ப ஆலோசனை சேவையினைப் பெற்றுக்கொள்ளும் போது அதிகமாக பயன்படுத்தப்படுவது பௌதிக வளங்களை விடவும் புலமைசார் வளங்களே என்பதனால் பெருமளவிலான சொத்துக்களின் தேவைப்பாடு எழுவதில்லை. அதேபோல், எம்மால் அதிகமான சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட சேவை பெறுநரின் இடத்தின் பௌதிக வளங்களைப் பயன்படுத்தியே ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சில மென்பொருள்களை அபிவிருத்தி செய்யும்போது மென்பொருள் பொறியியலாளர்கள் சம்பந்தப்பட்ட சேவை பெறுநரின் இடத்தில் வேலை பூர்த்தியடையும் வரை நிரந்தரமாக நின்று மென்பொருள் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

மேலும், நிறுவகமானது கீழே குறிப்பிடப்படும் விதத்தில் கணினி இயந்திரங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை உடமையாக்கிக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 2009.05.11. | கணினிகள் 2 | 159,000.00 |
| 2011.06.28 | கணினிகள் 2 | 157,950.00 |
| | | 316,950.00 |

இதற்கிணங்க, எம்மிடமுள்ள சொத்துக்களின் அளவு தொழில்பாட்டு நடவடிக்கைகளுக்கு மிகவும் போதுமானது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

05. குறித்துக்கொண்டேன்.

நன்றி.
இங்கனம் – விசுவாசமுள்ள

பேராசிரியர் ஜீ.என். விக்கிரமநாயக்க
பணிப்பாளர்
கொழும்புப் பல்கலைக்கழக கணினி கற்கைகள் நிறுவகம்

பிரதிகள்:

1. செயலாளர், நிதி அமைச்சு
2. செயலாளர், நெடுஞ்சாலைகள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் உயர்கல்வி அமைச்சு
3. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உப வேந்தர், கொழும்புப் பல்கலைக்கழகம்